Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلی علی رسوله الکریم وعلی عبده المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 30

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

3 துல்கஅதா 1438 ஹிஜ்ரி கமரி 27 வஃபா 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

27 ஜூலை 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஃஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஃஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அன்பிற்குரியவர்களே! இது மார்க்க வளர்ச்சிக்காகவும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும் சேவை செய்வதற்கான தருணமாகும். இந்த தருணத்தை ஒரு பாக்கியமாகக் கருதுங்கள். இது பின்னர் ஒருபோதும் உங்கள் கைக்கு வரப்போவதில்லை. நீங்கள் உண்மையிலும் தூய்மையிலும் நிலைத்து நிற்பதைக் கண்டு வானத்திலுள்ள மலக்குகளும் வியப்படைந்து உங்களுக்காக அவர்கள் துஆ செய்வதற்குத் தகுந்தாற்போல் நீங்கள் உங்களின் முன்மாதிரியை எடுத்துக் காட்டுங்கள்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இக்காலத்தில் நமது பெண்கள் பித்அத் என்னும் நவீன பழக்க வழக்கங்களில் மூழ்கிக் கிடக்கின்றனர். அவர்கள், பலதார மணத்தைப் பற்றிய விஷயத்தை மிகத் தீய கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள். அதனைப் பற்றி அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்றே கூற வேண்டும். இறைச் சட்டம் தன்னுள் எல்லா விதமான சிகிச்சை முறைகளையும் கொண்டுள்ளது என்பதனை அவர்கள் அறியவில்லை. இஸ்லாத்தில் பலதார மணத்தைப் பற்றிய விஷயம் இடம் பெறாமல் இருந்தால் ஆண்களுக்கு இரண்டாம் திருமணம் செய்ய வேண்டிய நிலை உண்டாகும் போது இஸ்லாம் மார்க்கச் சட்டத்தில் அதற்கு எந்த வழியுமில்லை என்று ஆகிவிடும். உதாரணமாக, ஒரு பெண், புத்தி சுவாதீனமாக இருந்தால் அல்லது தொழுநோயாளியாக இருந்தால் அல்லது ஒன்றுமே செய்ய முடியாத நிரந்தரமான நோயால் பீடிக்கப்பட்டவளாக இருந்தால் அப்பெண் இரக்கம் காட்ட வேண்டிய நிலையில் இருக்கிறாள். ஆனால் அவள் பயனற்றவளாகவும் இருக்கிறாள். கணவனும் தனிமையாக இருக்கும் நிலையில் பொறுமை செய்ய முடியாதவனாக இருந்தால் அவனும் கருணைக்குத் தகுதியுள்ளவனாவான். இந்நிலையில் அக்கணவனுக்கு மறுமணம் செய்வதற்கு அனுமதி வழங்காமலிருப்பது அவனது ஆண் தன்மைக்கு செய்யும் அநியாயம் ஆகும். உண்மையில் இறை சட்டமானது இவ்விஷயங்களை முன் வைத்து ஆண்களுக்கு இவ்வழியைத் திறந்து வைத்திருக்கிறது. மேலும் தவிர்க்க முடியாத சமயத்தில் பெண்களுக்கும் உரிய பாதையைத் திறந்து வைத்திருக்கிறது. கணவனும், மனைவிக்கு உதவாமல் போனால் அவள் நீதிபதி மூலமாக தலாக்குக்கு நிகராக இருக்கும் ‘குலா’ (மண விலக்கு) பெறலாம்.

இறைச்சட்டம் ஒரு மருந்துக் கடைக்கு ஒப்பானதாக இருக்கிறது. அக்கடையில் எல்லா நோய்களுக்கும் தேவையான மருந்து கிடைக்கா விட்டால் அக்கடையானது சரியாக நடைபெற முடியாது. எனவே ஆண்களுக்கு இரண்டாவது திருமணம் செய்ய கட்டாயப்படுத்தக் கூடிய சில பிரச்சனைகள் உண்டாகி விடுகிறதென்பது உண்மை இல்லையா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். எந்த மார்க்கச் சட்டத்தில் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தக்க பரிகாரம் காணப்படமாட்டாதோ அந்த மார்க்கச் சட்டத்தால் என்ன பயன்?

கவனியுங்கள்! விபச்சாரம் மாத்திரமே பைபிளின் புதிய ஏற்பாட்டில் விவகாரத்து செய்யும் விஷயத்தில் உரிய நிபந்தனையாக இருக்கிறது. மேலும் கணவனையும் மனைவியையும் உயிர் விரோதிகளாக ஆக்கிவிடும் ஏனைய நூற்றுக்கணக்கான காரணங்கள் இருக்கின்றன. அவை பற்றி அதில் எதுவும் கூறப்படவில்லை. இதனால் கிறிஸ்தவ சமுதாயம் இக்குறையை சகிக்க முடியாததால் இறுதியில் அமெரிக்காவில் விவாகரத்துக்குரிய ஒரு சட்டத்தை நிறைவேற்ற நேர்ந்தது. இச்சட்டத்தால் பைபிளின் புதிய ஏற்பாடு எங்கு போனது என்பது பற்றி இப்போது சிந்தியுங்கள்.

பெண்களே! நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்களுக்கு அருளப்பட்ட வேதம் புதிய ஏற்பாட்டைப் போன்று மனிதனின் தலையீடு அதற்கு அவசியமானதல்ல. இந்த வேதத்தில் ஆண்களது உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருப்பது போலவே பெண்களது உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. கணவன் பலதார மணம் செய்வதில் மனைவிக்கு வெறுப்பு உண்டாகுமேயானால் அவள் நீதிபதி மூலமாக ‘குலா’ என்னும் மணவிலக்கு பெற முடியும். முஸ்லிம்களிடையே உண்டாகவிருக்கும் பலவிதமான நிலைகளை முன் வைத்து, இஸ்லாம் மார்க்கச் சட்டங்கள் குறைபாடுள்ளவையாக ஆகாமலிருக்கும் பொருட்டுத் தனது சட்டத்தில் அவற்றை குறிப்பிட்டிருக்க வேண்டியது இறைவனுக்கு மிகவும் அவசியமானதாக இருந்தது.

ஆகவே பெண்களே! உங்களது கணவன்மார்கள் மறுமணம் செய்ய விரும்பும் போது நீங்கள் இறைவனை குறை கூறாதீர்கள். மேலும் இறைவன் உங்களைச் சங்கடங்களிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் காப்பாற்றும் பொருட்டு அவனிடம் பிரார்த்தனை செய்து வாருங்கள். எந்த ஒரு மனிதன் இரு மனைவிமார்களை திருமணம் செய்த பின் அவர்களோடு நடுநிலையோடு நடந்து கொள்ள மாட்டானோ அவன் சந்தேகமின்றி பெரும் அநியாயக்காரனாகவும் இறைவனுக்கு பதில் கூற வேண்டியவனாகவும் இருக்கின்றான். ஆயினும் நீங்களும் இறைவனுக்கு கீழ்ப்படிபவர்களாகவும் அவனது கோபத்திற்கு ஆளாகக் கூடியவர்களாகவும் ஆகாதிருப்பீர்களாக. ஒவ்வொருவரும் அவர்களது செயல்களைப் பற்றி கேட்கப்படுவார்கள். நீங்கள் இறைவனது பார்வையில் நல்லவர்களாக மாறினால் உங்களின் கணவனும் நல்லவனாக ஆக்கப்படுவான். இஸ்லாம் மார்க்கச் சட்டமானது பல்வேறு நலன்களை முன்வைத்து பலதார மணத்தை ஆகுமானதாகத் தீர்மானித்த போதிலும், கழா-வ-கத்ர் என்னும் விதியின் சட்டங்கள் உங்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இஸ்லாம் மார்க்கச் சட்டங்களை உங்களால் சகிக்க முடியாதென்றால், துஆ மூலமாக கழா-வ-கத்ர் என்னும் விதியின் சட்டங்களைக் கொண்டு பயன் பெற முயற்சி செய்யுங்கள். ஏனெனில் கழா-வ-கத்ர் என்னும் இறைவன் வகுத்த விதியின் சட்டங்கள் இஸ்லாம் மார்க்கச் சட்டங்களையும் வெல்லக் கூடியவையாயிருக்கின்றன. நீங்கள் தக்வா என்னும் இறையச்சத்துடன் செயல்படுங்கள். உலகத்துடனும், அதன் அலங்காரத்துடனும் அதிகமாக உள்ளத்தை பறிகொடுத்து விடாதீர்கள். உயர் குலத்தின் பெயரால் பெருமைப்படாதீர்கள். எப்பெண்ணையும் ஏளனம் செய்யவோ நகைக்கவோ செய்யாதீர்கள். கணவன்மார்களின் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களுக்காக அவர்களை வற்புறுத்தாதீர்கள். நீங்கள் நிரபராதிகளாகவும் பரிசுத்தவான்களாகவும் கல்லறைகளில் பிரவேசிக்க முயற்சி செய்யுங்கள்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

நாம் ரமலானின் காரணமாக மட்டும் தொழுகைகளைப் பேணினோம். இனி எதிர்காலத்தில் சோம்பேறிகளாகி விடுவோம் என்றால் அது அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படக் கூடியவர்களாக நம்மை ஆக்காது. நாம் ரமலான் வரை மட்டுமே ஜுமுஆவை பேணுபவர்களாக இருந்தால் அது அல்லாஹ்வின் கட்டளைகளின்படி வழிநடப்பவர்களாக நம்மை ஆக்காது. நாம் திருக்குர்ஆன் ஓதுவதை ரமலான் வரை மட்டுமே அவசியமானது எனக் கருதினால் ரமலான் கழிந்த பிறகு அதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால் அது அல்லாஹ்வின் திருப்திக்குரிய வழிகளில் நடப்பவராக நம்மை ஆக்காது. நாம் ரமலான் வரை மட்டுமே ஸலவாத் ஓதுவதையும் மற்றும் திக்ரையும் செய்தால் அது அல்லாஹ் நம்மிடம் விரும்பாத செயலாக இருக்கும். நாம் நமது ஒழுக்கம் மற்றும் இதர நன்மையான காரியங்களை நிர்ப்பந்தமாகக் கருதி அதனை வெறும் ரமலான் வரை மட்டுமே செய்து வந்தால் அது அல்லாஹ்வின் விருப்பத்திற்குரியதல்ல. ரமலான் ஒரு பயிற்சி முகாமாகவே நம்மிடம் வருகிறது. ரமலானில் செய்யப்பட்ட நன்மைகளில் மற்ற நாட்களில் மேலும் நீங்கள் முன்னேற்றம் காண வேண்டும் என்பதற்காகவே ரமலானை அல்லாஹ் நம்மீது கடமையாக்கியுள்ளான். வரக்கூடிய ஒவ்வொரு ரமலானும் முடிவுறும்போது இறைவணக்கம் மற்றும் நன்மைகளின் புதிய படித்தரம் மற்றும் உயரத்தில் நம்மை எட்ட வைக்க கூடியதாக அது இருக்க வேண்டும். அதனால் நாம் இறை வணக்கம் மற்றும் நன்மையின் புதிய படித்தரம் மற்றும் உயர்வை நிலைநாட்டக் கூடியவர்களாக ஆகி விட வேண்டும். நிரந்தர மனப்பாங்குடன் இந்த நன்மைகளைத் தொடர வேண்டும் என்று அல்லாஹ் நம்மிடம் வேண்டுகின்றான்.

கடமையான ஐவேளை தொழுகைகளையும் அவற்றிற்குரிய நேரத்தில் முறைப்படி நிறைவேற்றுவது, ஜுமுஆ தொழுகையின் முக்கியத்துவத்தைப் புரிந்தவாறு அதை முறையாக நிறைவேற்றுவதைத கடைபிடிப்பது, திருக்குர்ஆனை முறையாக ஓதி வருவது, அதை புரிந்து ஓதுவது, அதில் குறிப்பிடப்பட்ட கட்டளைகளுக்கு ஏற்ப செயல்படுவதற்கு முயற்சி செய்வது, ஏனைய நல்லொழுக்கங்கள் மற்றும் நன்மைகளைக் கடைபிடிப்பது தொடர்பாக திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் ஹுஸூர் அவர்கள் வழங்கியுள்ள முக்கிய போதனைகள்.

எனவே நம்மில் ஒவ்வொருவரும் இந்த உறுதிமொழியை எடுத்தவாறு ரமலானிலிருந்து வெளி வர வேண்டும். அல்லாஹ்வும், அவனது தூதர் (ஸல்) அவர்களும் என்னென்ன விஷயங்களைக் கூறியுள்ளார்களோ, அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு தெளிவுபடுத்தி தந்து விட்டார்கள். எனவே அதனை கருத்தில் கொண்டு அதற்கேற்ப நாம் நமது வாழ்வினை கழிக்க முயல வேண்டும். அவ்வாறு செய்தால்தான் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றிற்கேற்ப ரமலானை கழிக்க நாங்கள் முயற்சி செய்தோம் என நம்மால் கூற முடியும். அல்லாஹ் அதற்கான பாக்கியத்தை நமக்கு தந்தருள்வானாக.

---

ரப்வாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய மர்ஹூம் சவுத்ரி ஸுஹூர் அஹ்மது பாஜ்வா சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய முஷ்தாக் ஸுஹ்ரா சாஹிபா அவர்களும் எகிப்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய அப்துஹூ பக்ர் சாஹிப் அவர்களும் வஃபாத் ஆகி விட்டனர். மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**

**23 ஜுன் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **23 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُولُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ـ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ـ

அருளுக்குரிய ரமலான் மாதம் வந்தது. வந்து வேகமாக கடந்தும் விட்டது. நீண்ட பகலாகவும், வெப்பம் அதிகமாகவும் இருந்தது. இம்முறை இங்கு வரலாறு காணாத வெப்பம் இருந்தது. ஆயினும் பெரும்பாலார் அல்லது குறைந்தபட்சம் என்னை சந்திக்க வருகை தந்தவர்கள் இம்முறை எங்களுக்கு நோன்பின் தாக்கம் அதிகம் ஏற்படவில்லை அல்லது மிகக் கடுமையான வெப்பம் நிலவியபோதிலும் குறைந்த அளவே தாக்கம் இருந்தது எனக் கூறினர். ஆனால், நோன்பு அசாதாரணமான வகையில் மிக எளிமையாகக் கடந்து விட்டது என்று கூறுவது நமக்கு போதுமானதல்ல. எளிதாகக் கடந்து விட்டது என்றால் அது நம்மீது அல்லாஹ் செய்த அருளாகும். அவன் நம்மை இந்த நாட்களை எளிதாகக் கடக்கச் செய்து விட்டான் அல்லது பசி மற்றும் தாகத்தின் தாக்கம் சிறிதளவே நமக்கு ஏற்பட்டதும் அவனது அருளே ஆகும். எனவே எங்களுக்கு சிறிதளவே பசி மற்றும் தாகத்தின் தாக்கம் ஏற்பட்டது என்று கூறுவது மட்டும் போதுமானதல்ல. மாறாக, நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நாம் இந்த அருளுக்குரிய நாட்களில் எதைப் பெற்றுக் கொண்டோம் என்று நாம் ஆராய வேண்டும். எளிதாக நோன்புகள் கழிந்திருந்தாலும் சரி அல்லது சிறிதளவே கஷ்டம் ஏற்பட்டிருந்தாலும் சரி அதனால் நாம் நோக்கத்தை அடைந்து விட முடியாது.

நாம் என்ன பெற்றுக் கொண்டோம்? என நம்மை நாமே ஆய்வு செய்யும்போதுதான் அசல் நோக்கத்தை நம்மால் அடைய முடியும். அல்லாஹ் ரமலானின் இந்நாட்களில் ஏழாவது வானத்தில் இருந்து கீழ் வானம் வரை வந்து விடுகிறான். இந்நாட்களில் அடியார்களுக்கு நெருக்கமாக வந்து அவர்களின் துஆக்களைக் கேட்கிறான். (அல்ஜாமிஉ லிஷுஃ. பில் ஈமான் அல்ஜுஸ்வுல் காமிஸ் ஹதீஸ் 3334, 3394. பைரூத்திலுள்ள மக்தபதுர்ருஷ்து நாஷிரூன் அச்சகத்தில் 2004 -ல் அச்சிடப்பட்டது) அல்லாஹ் இந்நாட்களில் நோன்பாளிகளின் கூலியாக தானே ஆகி விடுகிறான். (சஹீஹ் புகாரி கிதாபுத் தவ்ஹீது பாபு கவ்லுல்லாஹித்தஆலா யுரீதூன அன்யுபத்திலூ கலாமல்லாஹி..... ஹதீஸ் 7492) அல்லாஹ் இந்நாட்களில் ஷய்த்தானைக் கட்டிப் போட்டு விடுகிறான். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுஸ் ஸியாமி பாபு ஃபழ்லி ஷஹ்ரி ரமலான் ஹதீஸ் 2495) நாம் அல்லாஹ்வின் இந்த அருட்கள் மற்றும் அவனது கருணையிலிருந்து பயன் பெறுவதற்காக இந்நாட்களில் என்ன செய்தோம்? அல்லது என்னென்ன உறுதி பூண்டுள்ளோம்? நாம் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்பதற்கும் அவனது போதனைக்கேற்ப வாழ்க்கையைக் கழிப்பதற்கும் கடந்த கால கவனக் குறைவுகளைக் களைவதற்கும் என்ன உறுதிமொழி எடுத்துள்ளோம்? மேலும் எந்த அளவுக்கு நாம் நம்மில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளோம்? இந்த ஆய்வுகள் அல்லாஹ்வின் நிரந்தர அருள்களின் பக்கம் நமக்கு கவனமூட்டக்கூடியவையாக இருக்கும். மேலும் அதன் காரணமாக நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சி நம்மில் உருவாகும். அதன் விளைவாக அல்லாஹ்வின் அருள்களை ஈர்க்க கூடியவர்களாக அது நம்மை ஆக்கி விடும். எனவே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாம் ரமலானின் காரணமாக மட்டும் தொழுகைகளைப் பேணினோம். இனி எதிர்காலத்தில் சோம்பேறிகளாகி விடுவோம் என்றால் அது அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படக் கூடியவர்களாக நம்மை ஆக்காது. நாம் ரமலான் வரை மட்டுமே ஜுமுஆவை பேணுபவர்களாக இருந்தால் அது அல்லாஹ்வின் கட்டளைகளின்படி வழிநடப்பவர்களாக நம்மை ஆக்காது. நாம் திருக்குர்ஆன் ஓதுவதை ரமலான் வரை மட்டுமே அவசியமானது எனக் கருதினால் ரமலான் கழிந்த பிறகு அதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால் அது அல்லாஹ்வின் திருப்திக்குரிய வழிகளில் நடப்பவராக நம்மை ஆக்காது. நாம் ரமலான் வரை மட்டுமே ஸலவாத் ஓதுவதையும் மற்றும் திக்ரையும் செய்தால் அது அல்லாஹ் நம்மிடம் விரும்பாத செயலாக இருக்கும்.

நாம் நமது ஒழுக்கம் மற்றும் இதர நன்மையான காரியங்களை நிர்பந்தமாகக் கருதி அதனை வெறும் ரமலான் வரை மட்டுமே செய்து வந்தால் அது அல்லாஹ்வின் விருப்பத்திற்கு உரியதல்ல. ரமலான் ஒரு பயிற்சி முகாமாகவே நம்மிடம் வருகிறது. ரமலானில் செய்யப்பட்ட நன்மைகளில் மற்ற நாட்களில் மேலும் நீங்கள் முன்னேற்றம் காண வேண்டும் என்பதற்காகவே ரமலானை அல்லாஹ் நம்மீது கடமையாக்கி–யுள்ளான். வரக்கூடிய ஒவ்வொரு ரமலானும் முடிவுறும்போது இறைவணக்கம் மற்றும் நன்மை–களின் புதிய படித்தரம் மற்றும் உயரத்தில் நம்மை எட்ட வைக்க கூடியதாக அது இருக்க வேண்டும்.

அதனால் நாம் இறை வணக்கம் மற்றும் நன்மையின் புதிய படித்தரம் மற்றும் உயர்வை நிலைநாட்டக் கூடியவர்களாக ஆகி விட வேண்டும். நிரந்தர மனப்பாங்குடன் இந்த நன்மைகளைத் தொடர வேண்டும் என்று அல்லாஹ் நம்மிடம் வேண்டுகின்றான். அல்லாஹ் أَقِيْمُوا الصَّلٰوةَ தொழுகையை நிலைநாட்டுங்கள் என்ற கட்டளையை வழங்கியுள்ளான். தொழுகைக்கான நேரத்தில் தொழுகையை அழகுப்படுத்தித் தொழுங்கள். حٰفِظُوْا عَلَى الصَّلَوٰتِ وَالصَّلٰوةِ الْوُسْطٰى அதாவது அனைத்து தொழுகைகளையும் குறிப்பாக நடுத்தொழுகையையும் முழுமையான கவனத்தில் கொள்ளுங்கள் (2:239) என்று அல்லாஹ் கூறுகின்றான். ஐவேளை தொழுகைகள் கடமை என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் அறிவார். எனவே ஐவேளைத் தொழுகைகளைப் பேணுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. குறிப்பாக நடுத்–தொழுகையின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. காரணம் அல்லாஹ்விற்கு மனித இயல்பு நன்றாகத் தெரியும். எனவே சிறப்பாக அழுத்தம் கொடுத்து நடுத்தொழுகையின் பக்கம் அல்லாஹ் கவனமூட்டியுள்ளான். صَلٰوةُ الْوُسْطٰى என்பதன் பொருள் நடுத்தொழுகை அல்லது முக்கியமான தொழுகை அதாவது தொழுகைக்கான முக்கியத்துவம் அதிகரித்து விடும் தொழுகைக்–கான நேரம் என்பதாகும். அல்லாஹ் ஒவ்வொரு தொழுகையையும் கடமையாக்கியுள்ளான். அவ்வாறிருக்க صَلٰوةُ الْوُسْطٰى நடுத்தொழுகைக்கு ஏன் முக்கியத்துவம் அளித்துள்ளான்? காரணம், சில தொழுகைக்கான நேரங்களில் மனிதன் தனிப்பட்ட அல்லது வேறு சில உலகியல் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பவனாக இருக்கின்றான். சிலருக்கு ஃபஜ்ர் தொழுகையை தொழுவது கஷ்டமாக உள்ளது. அந்த தருணத்தில் எழுந்து ஃபஜ்ர் தொழுவது மனிதனுக்கு இறை நெருக்கத்தைப் பெற்று தருகிறது. அந்த தொழுகை முக்கியமான அல்லது நடுத் தொழுகையாக அவருக்கு ஆகி விடுகின்றது. வேறு சிலருக்கு தமது பணி அல்லது வியாபாரத்தின் காரணமாக ளுஹர், அஸ்ர் தொழுகையைத் தொழுவது கஷ்டமாக உள்ளது. அத்தகையவர்களுக்கு அந்த தொழுகையின் முக்கியத்துவம் கூடி விடுகிறது. ஆக கடின உழைப்பு மற்றும் முயற்சி செய்து அல்லாஹ்வை வணங்குவதன் பக்கம் மனிதன் வந்தால் அல்லாஹ் அந்த முயற்சிக்கு கூலி வழங்குகின்றான். அதனை கண்ணியப்படுத்துகிறான். நன்மைகளுக்கு கூலி வழங்குவதில் அல்லாஹ்வுக்கு எல்லையே இல்லை. அவன் தன் வழியில் முயற்சி செய்பவர்களுக்கு எல்லை இல்லாமல் வழங்குகின்றான். உலகம் மற்றும் சுயநலம் என்ற சிலைகளை மனிதன் உடைத்தெரிந்து அவன் பக்கம் செல்லும்போது அல்லாஹ்வின் அருள்களுக்கும் எல்லை இருப்பதில்லை அல்லாஹ் தொழுகையைப் பற்றி பல்வேறு வகைகளில் பல்வேறு இடங்களில் நமக்கு கவனமூட்டியுள்ளான். ரமலான் வரை மட்டுமே இறைவன் எல்லைக்குட்பட்டதாக ஆக்கவில்லை. மாறாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொழுகைகள், ஜுமுஆக்கள் மற்றும் ரமலானைப் பற்றி வழங்கிய அறிவுரை எப்படிப்பட்டதென்றால் அல்லாஹ்வின் அச்சத்தை உள்ளத்தில் கொண்ட ஒரு நம்பிக்கை–யாளர் எப்பொழுதும் அதனை கண் முன் நிறுத்த வேண்டும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஐவேளை தொழுகைகளும் ஒரு ஜுமுஆ, அடுத்த ஜுமுஆ வரையிலும், ஒரு ரமலான் அடுத்த ரமலான் வரையிலும் இடைப்பட்ட காலங்களில் ஏற்படும் பாவங்களுக்குப் பரிகாரமாக அமைந்து விடுகின்றன. பெரிய பாவங்கள் ஏதும் செய்யாத வரை இவை பரிகாரமாக அமைந்து விடும். (ஸஹீஹ் முஸ்லிம் கிதாபுத் தஹாரத் பாபு ஸலாத்தில் கம்ஸி வல்ஜுமுஅத்தி இலல் ஜுமுஅத்தி ஹதீஸ் 552)

ஆக, இங்கு நபி (ஸல்) அவர்கள் மிகவும் தெளிவாக விளக்கிக் கூறி விட்டார்கள். அதாவது மனிதன் முழுமையாக முயற்சி செய்து ஐவேளை தொழுகைகளை அதற்குரிய நேரங்களில் தொழுது வந்தால், ஐவேளை தொழுகைகள் பாவங்களுக்குப் பரிகாரமாக அமைந்து விடும். ஒவ்வொரு தொழுகைக்கும் இடைப்பட்ட நேரத்தில் பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். சிறிய சிறிய பலவீனங்கள் வெளிப்படும் என்றால் அல்லாஹ் அதனை மன்னித்து விடுவான். நிபந்தனை என்னவென்றால் தொழுகைகளை அதற்குரிய நேரத்தில் தொழுகைக்கான உரிமைகள் வழங்கப்பட்டவாறு தொழ வேண்டும்.

அடுத்து இதேபோன்று ஒவ்வொரு ஜுமுஆவின் முக்கியத்துவத்தையும் அல்லாஹ் தெளிவுபடுத்தி விட்டான். ஐவேளை தொழுகைகளுக்கு முக்கியத்துவம் இருப்பது போன்று, அதனை அதற்குரிய நேரத்தில் தொழுவதற்கான கட்டளை இருப்பது போன்று, அவ்வாறு ஐவேளை தொழுகைகளை தொழுவதினால் அதற்கு இடைப்பட்ட காலங்களில் ஏற்படும் சிறிய பாவங்களை அல்லாஹ் தனது அருளினால் எவ்வாறு மன்னித்து விடுகிறானோ அவ்வாறே இன்னும் சொல்லப்போனால் அவனது வாக்குறுதிக்கேற்ப தொழுகைக்குரிய உரிமைகள் வழங்கப்பட்டு தொழுகைகள் நிறைவேற்றப்பட்டால் மனிதன் வெட்கக்கேடான விஷயங்களிலிருந்தும் தப்பித்து விடுகிறான். தீமைகளிலிருந்து மனிதன் தப்பித்து விடுகிறான்.

எவ்வாறிருப்பினும் கூறினார்கள்: எவ்வாறு ஐவேளை தொழுகைகள் கடமையோ அதேபோல் ஜுமுஆ தொழுகையும் கடமையாகும். ஒரு ஜுமுஆவிலிருந்து அடுத்த ஜுமுஆ வரையிலான இடைப்பட்ட காலத்தில் வெளிப்படும் சிறு சிறு பலவீனங்களை அல்லாஹ் மன்னித்து விடுகிறான். இதனால் இவ்வாறு சிறிய பாவங்கள் எதை வேண்டுமானாலும் மனிதன் செய்து கொள்ளலாம் அல்லாஹ் மன்னித்து விடுவான் என பொருள் கொள்ளக் கூடாது. அது தவறாகும். மாறாக அதன் கருத்து என்னவென்றால் மனித பலவீனத்தின் காரணமாக, தவறுகள் ஏதும் நிகழ்ந்திருந்தால் அல்லாஹ் ஐவேளை தொழுகைகள் மற்றும் ஜுமுஆ தொழுகை போன்றவற்றை முறையாகப் பேணுதல் மற்றும் அதில் செய்யப்பட்ட மன்னிப்பிற்கான வேண்டுதல்கள் மற்றும் எதிர்காலத்தில் நான் இந்த தவறுகளைச் செய்ய மாட்டேன் என்ற வாக்குறுதி போன்றவற்றின் அடிப்படையில் அல்லாஹ் மன்னித்து விடுகிறான்.

அடுத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஜுமுஆவினை பேணுதலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்: எவர் தொடர்ந்து மூன்று ஜுமுஆக்களை வேண்டும் என்றே கை விட்டு விட்டாரோ, அல்லாஹ் அவரது உள்ளத்தில் முத்திரையிட்டு விடுகிறான். (சுனன் திர்மிதி கிதாபுல் ஜுமுஅத்தி பாபு மாஜாஅ ஃபீ தரகில் ஜுமுஅத்தி மின் கைரி உஸ்ர் ஹதீஸ் 500) ஓர் அறிவிப்பில் அத்தகைய நபரின் உள்ளம் கறுப்பாகி விடுகிறது எனவும் வந்துள்ளது. (அர்ஷீஃபு முன்தகீ வாலுகத் 3 டிசம்பர் 2010 அல்மக்தபதுஸ் ஸாமிலதீ) எனவே ஜுமுஆவின் இந்த முக்கியத்துவத்தை ஒவ்வொருவரும் புரிய வேண்டும். இன்று ரமலானின் கடைசி ஜுமுஆ ஆகும். எனவே பெரிய பள்ளிவாயிலில் சென்று தொழுது விடுவோம் என

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அவ்வொளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவர். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவன் இருளில் எறியப்படுவான். இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டை நானே....*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:209)*

**A. சம்சுல் ஆலம்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*

**M.Y. கன்சுல் ஆயிஷா**

சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

எண்ணி இருக்கலாம் அல்லது இது கடைசி ஜுமுஆ எனவே கண்டிப்பாக தொழுதே ஆக வேண்டும் என வேறு சிலர் கூறி இருக்கலாம். ஜமாஅத் உறுப்பினர்களுக்கு ஜுமுஆவின் முக்கியத்துவத்தின் பக்கம் மீண்டும் மீண்டும் பலமுறை கவன மூட்டப்படுவதுண்டு. தற்போது இவ்விஷயத்தில் கவனக்குறைவாக இருக்கும் மக்கள் மிகக் குறைவானவரே ஆவர். ஆயினும் எவர் கவனமற்றிருக்கிறாரோ அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களை செவியுற்ற பிறகு வேதனைக்குள்ளாக வேண்டும். நீங்கள் ரமலானின் ஜுமுஆக்களை மட்டும் தொழுங்கள் என்றோ அல்லது ரமலானின் கடைசி ஜுமுஆவை தொழுது விடுங்கள் நற்கூலி கிடைத்து விடும் என்றோ அல்லாஹ் கூறவில்லை. மாறாக அனைத்து ஜுமுஆவின் முக்கியத்துவத்தையும் அல்லாஹ் கூறியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا نُوْدِيَ لِلصَّلٰوةِ مِنْ يَّوْمِ الْجُمُعَةِ فَاسْعَوْا
اِلٰى ذِكْرِ اللّٰهِ وَذَرُوا الْبَيْعَ ۭ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! ஜுமுஆ நாளின் ஒரு பகுதியில் நீங்கள் தொழுகைக்காக அழைக்கப்பட்டால் அல்லாஹ்வை நினைவு கூறுவதன் பக்கம் செல்வதற்கு விரைந்து செல்லுங்கள். மேலும் வியாபாரத்தை விட்டு விடுங்கள். நீங்கள் அறிந்திருந்தால் உங்களுக்கு அது சிறந்ததாகும். (62:10)

எனவே ஒவ்வொரு ஜுமுஆ நாளன்று தொழுகைக்காக சிறப்பான ஏற்பாடு செய்யுங்கள். மேலும் உங்களது வியாபாரங்களை விட்டு விடுங்கள். வியாபாரங்கள் உங்களது பணிகள் மற்றும் வணிகங்கள் அனைத்தையும் விட்டு விடுங்கள். அனைத்து பணிகளையும் வணிகங்களையும் விட்டு விட்டு நான் ஜுமுஆ தொழ வேண்டுமே என்பதைப் பற்றி மட்டுமே கவலைப்படுங்கள். நீங்கள் அறிந்திருந்தால் இதுவே உங்களுக்கு சிறந்ததாகும் என்று அல்லாஹ் கூறுகின்றான். இதில் தான் பரக்கத் உள்ளது. இதன் மூலமே உங்களது வியாபாரங்களில் பரக்கத் ஏற்படும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கேற்ப வேண்டுமென்றே ஜுமுஆ தொழுகையை விட்டு விடுபவரின் உள்ளத்தில் முத்திரையிடப்படு–கின்றது. அதுபோன்ற மக்களின் ஈமான் சரியானதாக இருப்பதில்லை. ஈமான் உண்மை–யானதென்றால் மனிதன் உலகியல் நலனுக்காக தமது ஜுமுஆவை தியாகம் செய்யமாட்டார்.

ஜுமுஆவில் குறித்த நேரத்திற்குள் வருதல் மற்றும் நிரந்தரமாக ஜுமுஆவை பேணுபவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஜுமுஆ நாளன்று மஸ்ஜிதின் ஒவ்வொரு வாசலிலும் அல்லாஹ்வின் வானவர்கள் நிற்பர். அவர்கள் மஸ்ஜிதில் முதலில் வருபவரை முதல் நபர் என்றும் இரண்டாவதாக வருபவரை இரண்டாவது நபர் என்றும் எழுதுகின்றனர். இவ்வாறு ஜுமுஆ நாளன்று வானவர்கள் ஜுமுஆவில் வரக்கூடியவர்களின் பட்டியலைத் தயாரித்துக் கொண்டிப்பர். எந்தளவுக்கு என்றால் இமாம் (குத்பா கொடுப்பதற்காக) அமர்ந்து விடும்போது அவர்கள் வருகைப் பதிவேட்டை மூடிவிட்டு திக்ரே இலாஹியை கேட்கத் தொடங்கி விடுவர். (சஹீஹ் புகாரி கிதாபு பத்யில் கல்க் பாபு திக்ருல் மலாயிகதி ஹதீஸ் 3211)

மற்றுமோர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கியாமத் நாளன்று ஜுமுஆவில் வருகை தந்த கணக்கீட்டின்படி அல்லாஹ்வின் சன்னிதானத்தில் மக்கள் அமர்ந்திருப்பர். அதாவது முதலாமானவர், இரண்டாமானவர், மூன்றாமானவர், நான்காமானவர் என அமர்ந்திருப்பர்.

எனவே எவர்கள் எந்த நிர்பந்தமும் இல்லாமல், வேண்டுமென்றே பழக்கத்தின் காரணமாக ஜுமுஆவிற்கு தாமதமாக வருகின்றார்களோ அவர்களும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இங்கும் கூட ரமலானின் ஜுமுஆ மற்றும் கடைசி ஜுமுஆ என்பதனால் மக்கள் முன்னரே வந்து அமர்ந்துள்ளனர். மற்ற நாட்களில் பெரும்பாலும் நான் பார்த்தது என்னவென்றால் நான் வரும்போது மஸ்ஜிதின் பாதியளவில்தான் கூட்டம் இருக்கும். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து குத்பா முடிவதற்குள் அல்லது அதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் தான் மஸ்ஜித் நிறைகின்றது. எனவே சாதராண நாட்களிலும் இதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும்.

ஜுமுஆ தொடர்பாக இதனையும் கூறி விடுகிறேன். ஜுமுஆ ஆண்களுக்கே கடமையானதாகும். பெண்கள் கலந்து கொள்ள இயலும் என்றால் நல்ல விஷயம். உபரியான நன்மைகளை அவர்கள் பெறுவர். நிச்சயமாக கலந்து கொள்ளட்டும். மேலும் சில நேரங்களில் தாய்மார்கள் கலந்து கொள்ளும்போது பிள்ளைகளுக்கும் ஜுமுஆ தொழுவதின் பக்கம் கவனம் ஏற்படுகின்றது. ஆனால், எவ்வாறு இருப்பினும் ஜுமுஆ நாளன்று மஸ்ஜிதிற்கு வருவது ஆண்களுக்கு மட்டுமே கடமையாகும். இது தொடர்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல் மிகத் தெளிவானதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு முஸ்லிமின் மீது ஜமாஅத்துடன் இணைந்து ஜுமுஆ தொழுவது கடமையாகும். நான்கு வகை மக்களைத் தவிர மற்றவர் மீது கடமையாகும். அவர்கள் யாரென்றால், அடிமை, பெண், குழந்தை, நோயாளி ஆகியோர் ஆவர். (சுனன் அபீதாவூது கிதாபுஸ் ஸலாத்தி பாபுல் ஜுமுஅத்தி லில்மம்லூகி வல்மர்அதி ஹதீஸ் 1067) இந்த நான்கு வகையான நபர்கள் மீது ஜுமுஆ தொழுகை கடமையல்ல. பண்டைய காலத்தில் அடிமைகள் இருந்தனர். தற்போது அப்படி இல்லை. இந்த நாடுகளில் உள்ள பணியாளர்கள் தமது முதலாளிகளிடம் கூறி ஜுமுஆ நேரத்தில் அனுமதி பெற்று விடுமுறை எடுத்துக் கொள்ள வேண்டும். சிலர் முயற்சி செய்தனர். அவர்களுக்கு அனுமதி கிடைத்தும் விடுகின்றது. வேறு நிர்பந்தம் இருக்குமென்றால் அக்கம் பக்கத்தில் உள்ள அஹ்மதிகளைத் தேட வேண்டும். 3,4 பேர் ஒன்றிணைந்து ஜுமுஆ தொழுது கொள்ள வேண்டும். பெண்கள் மீது கடமையல்ல. ஆனால் குறிப்பாக சிறு பிள்ளைகளை உடைய பெண்களிடம் கூறுகின்றேன். நீங்கள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். சிறு பிள்ளைகளுடன் மஸ்ஜிதிற்கு ஜுமுஆவிற்கு வராதீர்கள். பிள்ளைகளின் அழுகை மற்றும் கூப்பாடுகளால் பிறரின் தொழுகை கெடுகின்றது. அவர்களால் சரியாக குத்பா கேட்க முடியாமல் போகின்றது. ஆயினும் பெருநாள் அன்று வருவது அனைவருக்கும் ஒவ்வோர் ஆண், பெண் குழந்தைக்கும் அவசியமானதாகும். அதில் கண்டிப்பாக பங்கு பெற வேண்டும். (சஹீஹ் புகாரி கிதாபுல் ஈதைன் பாபு தகப்புரி அய்யாமி மினா ஹதீஸ் 971) பெருநாள் அன்று சிறு பிள்ளைகளை உடைய தாய்மார்கள் வந்தாலும் அவர்களுக்கென தனி இடம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இடம் இல்லா விட்டாலும் கூட தொழுகை விலக்கப்பட்டதாக இருந்தாலும் கூட அத்தகைய தாய்மார்கள் தமது சிறு பிள்ளைகளுடன் தனியாக அமர்ந்து குத்பாவைக் கேளுங்கள்.

எனவே இன்று ஜுமுஆவிற்காக பெரும் எண்ணிக்கையில் மக்கள் வருகை தந்துள்ளனர். எனவே நான் இதன் பக்கம் கவனமூட்டுகிறேன். ஆண் தமது ஜுமுஆ தொழுகையைக் குறிப்பாக பேண வேண்டும்.

அடுத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு ரமலானிலிருந்து அடுத்த ரமலான் வரை பாவங்கள் மன்னிக்கப்படுவது தொடர்பாகக் கூறினார்கள்: அதாவது அல்லாஹ் ஒரு ரமலானிற்கும் அடுத்த ரமலானிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்படும் சிறிய பாவங்களை மன்னித்து விடுகின்றான்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

*தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான். (2:111)*

**முஹம்மது ஹுஸைன்**

பழனி

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உலகப்பற்று கலவாத, வஞ்சகமோ கோழைத்தனமோ கலவாத, கட்டுப்பாட்டின் எத்தகுதியினையும் இழக்காத நம்பிக்கையைக் கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவராவர்.*

**மர்ஹூமா நதீரா பேகம்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்துத் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார். எனவே நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முயலுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும், அல்லாஹ் உங்களை ஒன்று சேர்ப்பான்...... (2:149)*

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**

மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

ஆயினும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெறுவதற்கான வழிமுறையை ஒரு வரிசைக் கிரமத்தில் கூறியுள்ளார்கள் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும். முதலில் ஐவேளை தொழுகை அடுத்து ஜுமுஆ தொழுகை அதன் பிறகு ரமலான். எனவே இந்த வரிசைக்கிரமத்தின் மூலம் ஒரு வருடத்திற்குப் பிறகு வருகிற ரமலான் மட்டுமே பாவமன்னிப்பைப் பெறுவதற்கான வழிமுறை ஆகும் என்ற தவறான எண்ணம் இதன் மூலம் அகன்று விட வேண்டும்.

ஐவேளை தொழுகைகளை தினமும் குறித்த நேரத்தில் தொழுது வருவதும், அத்துடன் ஏழாவது நாள் ஜுமுஆவில் நுழைந்து விடுவதும் ஜுமுஆவின் பரக்கத்துகளிலிருந்து உங்களுக்கு பங்கு பெற்றுத் தரும். ஆண்டு முழுவதுமான ஜுமுஆ ரமலானில் நுழைந்தபடி அருளுக்குரிய ரமலானின் பரக்கத்துகளிலிருந்து பலன் பெறக்கூடியவராக ஆக்கும். தினமும் தொழப்படும் ஐவேளை தொழுகை அல்லாஹ்விடத்தில் கூறும். அல்லாஹ்வே! உன்னுடைய இந்த அடியார் உன் மீதான அன்பு மற்றும் அச்சத்தின் காரணமாக பெரிய பாவங்களிலிருந்து தப்பித்தவாறு ஐவேளை உன் முன்னிலையில் ஆஜராகி வந்தார். பின்னர் ஒவ்வொரு ஜுமுஆவும் கூறும்.

உன்னுடைய இந்த அடியார் பெரிய பாவங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொண்டு ஜுமுஆ நாளன்று, அதாவது அந்த நாளைப் பற்றி உனது அன்பிற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள். ஜுமுஆ நாளன்று துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான நேரமும் வருகின்றது. (சஹீஹ் புகாரி கிதாபுத் தஃவாத்தி பாபுத் துஆ ஃபிஸ் ஸாஅத்தில்லதீ ஃபீ யவ்மில் ஜுமுஅத்தி ஹதீஸ் 6400) எனவே ஜுமுஆ நாளன்று துஆ ஒப்புக் கொள்ளப்படும் என்ற ஆசையைச் சுமந்தவாறு உனது அடியார் உன் முன்னிலையில் ஆஜராகி வந்தார் என ஜுமுஆ கூறும்.

ரமலான் கூறும். இறைவா! உனது அடியார் ரமலானின் கடமைகளை ஆற்றியவாறு பெரிய பாவங்களிலிருந்து தப்பித்தவாறு நன்மைகளைச் செய்து உனது கருணை பாவமன்னிப்பு மற்றும் நெருப்பிலிருந்து இரட்சிப்பு போன்றவற்றிற்கான நாட்களின் பரக்கத்துகளிலிருந்து நீ அவருக்கும் அருள்வாயாக என்றும் அந்த வானவர் கூறுவார். அந்நிலையில் மேன்மேலும் கருணை காட்டுபவனும், கண்ணியமிக்க இறைவனாகிய அல்லாஹ் அதிலிருந்து மனிதனை பயன் பெறச் செய்ய வைத்து தனது கருணை எனும் போர்வையால் தனது அடியாரைப் போர்த்தி விடுவான். மேலும் ஷைத்தானின் தாக்குதல்களிலிருந்தும் அவன் அவர்களைப் பாதுகாக்கின்றான்.

எனவே நம்மில் எவர் இந்த எண்ணத்துடன் தனது ஐவேளை தொழுகை ஜுமுஆ மற்றும் தனது நோன்பிற்கான உரிமைகளை வழங்கியவாறு அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுகின்றாரோ அவர் மிகவும் நற்பாக்கியசாலி ஆவர். அவர்கள் ரமலானின் இந்த சூழலின் விளைவாக எல்லா வகையிலும் தூய்மை அடைந்து ரமலானைக் கடப்பவராக அவர்கள் திகழ்வர். அந்த தூய்மை எப்படிப்பட்டதென்றால் நிரந்தரமாக அல்லாஹ்வின் வணக்கத்திற்கான உரிமைகளை வழங்கக் கூடியவராக அவரை ஆக்கக்கூடியதாக இருக்கும்.

அடுத்து ரமலானில் குறிப்பாக திருக்குர்ஆன் ஓதுவது மற்றும் கேட்பதின் பக்கம் கவனம் தோன்றுகிறது. குறைந்தபட்சம் ஒருமுறை திருக்குர்ஆனை ஓதி முடிக்க ரமலானில் பெரும்பாலார் முயல்கின்றனர். ஏனென்றால் அது சுன்னத்தும் கூட ஆகும். ஆனால் திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் ஏற்பட்டிருக்கும் கவனம் நமக்கு இந்த எண்ணத்தையும் உருவாக்க வேண்டும். அதாவது இனி நான் நிரந்தரமாக தினமும் முறையாக திருக்குர்ஆனின் ஒரு சிறு பகுதியை –யாவது ஓதி வருவேன் என்ற எண்ணம் வேண்டும். அல்லாஹ் எங்கு தொழுகைக்கான பல்வேறு நேரங்களின் பக்கம் கவனமூட்டியுள்ளானோ, அங்கு وَقُرْاٰنَ الْفَجْرِ ۭ اِنَّ قُرْاٰنَ الْفَجْرِ كَانَ مَشْهُوْدًا என்றும் கூறியிருக்கின்றான். அதாவது ஃபஜ்ர் வேளையில் குர்ஆன் ஓதுவதற்கும் முக்கியத்துவம் வழங்குங்கள். நிச்சயமாக ஃபஜ்ர் வேளையில் குர்ஆன் ஓதுவது எப்படிப்பட்டதென்றால் அதற்கு சாட்சி அளிக்கப்படும் என்று கூறுகின்றான். (17:79) எனவே திருக்குர்ஆன் ஓதுவது குறிப்பிட்ட நாட்களுக்காக மட்டும் நிர்ணயிக்கப்படவில்லை. மாறாக, தொழுகையுடன் இந்த விஷயம் எடுத்துரைக்கப்பட்டு அதன் முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளது.

அடுத்து திலாவத்துடன் அதனை புரிவதன் அவசியம் உள்ளது. அதன் மொழியாக்கத்தைப் படிப்பது அவசியமாகும். ஏனென்றால் அதன் மூலம் அல்லாஹ்வின் கட்டளைகளைப் பற்றியும் நமக்கு தெரிய வரும். இக்காலத்தில் குறிப்பாக தொடர்ந்து அதனைப் படிப்பது மிகவும் அவசியமாகும். முஸ்லிம்கள் என அழைக்கப்படுபவர்கள் கூட அதன் போதனைகளை மறந்து நிற்கின்றனர்.

அடுத்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் அதன் பக்கம் கவனமூட்டியவாறு கூறினார்கள்: “எவர்கள் திருக்குர்ஆனிற்கு கண்ணியமளிப்பார்களோ அவர்கள் விண்ணில் கண்ணியம் பெறுவர்”. (கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 13) விண்ணில் கண்ணியம் பெற விரும்பாத நபர் யார்?

எனவே அதனை ஓதுவதில் நிரந்தரம் மற்றும் அதன் கட்டளைகளைத் தேடி அதற்கேற்ப செயல்படுவது போன்றவை பயன்பெறச் செய்யும் விஷயங்களாகும்.

அதேபோன்று அல்லாஹ் கூறியுள்ளான்: நீங்கள் வெற்றி பெற விரும்பினால் எனது நினைவுகளால் உங்களது நாவுகளை நனையுங்கள். ஜுமுஆ தொழுகையை முடித்து வெளியேறிய பிறகு அல்லாஹ்வை நினைவு கூறுங்கள். அதன் மூலம் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். எனவே திருக்குர்ஆன் ஓதுவதன் இந்த முக்கியத்துவத்தை எப்போதும் கருத்தில் கொண்டவாறு இனி திருக்குர்ஆன் ஓதுவதில் எந்த சோம்பலும் ஏற்படக் கூடாது. இதேபோன்று இந்நாட்களில் இறை தியானத்தின் பக்கமும் கவனம் ஏற்பட்டுள்ளது. நாம் ரமலானிற்குப் பிறகும் இதனை தொடரும்போதுதான் நமக்கு பலன் கிடைக்கும். இதேபோன்று ஏனைய நல்லொழுக்கங்கள் மற்றும் நன்மைகள் உள்ளன. அதனையும் தொடர வேண்டும்.

அஹ்மதிகளாகிய நாம் மிகவும் நற்பேறு பெற்றவர்களாவோம். அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வரும் பாக்கியத்தை வழங்கியுள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நமது எல்லா வகையான சீர்திருத்தத்தையும் கருத்தில் கொண்டிருந்தார்கள். நம்மை நேரான பாதையில் வழிநடத்துவதற்கும் அல்லாஹ்வின் இருப்பின் பக்கம் நமது கவனத்தை நிலைநிறுத்துவதற்கும் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நாம் செயல்படுவதற்கும் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

அன்னார் நம்மிடம் என்ன எதிர்பார்க்கின் –றார்கள்? அது தொடர்பாக மீண்டும் மீண்டும் நமக்கு கூறினார்கள். என்னிடம் பைஅத் செய்துள்ள நீங்கள் இறை வணக்கத்தின் மூலமாகவும், நன்னடத்தையின் மூலமாகவும் உங்களிடம் எப்போதும் ஒரு தூய மாறுதலை உருவாக்குங்கள். மனிதன் தூய உள்ளத்துடனும், உண்மையுடனும், நன்றியுணர்வுடனும், ஆகுமற்ற அனைத்து ஆசைகளிலிருந்தும் தன்னை விலக்கிக் கொண்டு இறைவன் முன்னிலையில் மட்டுமே கையேந்தாத வரை அல்லாஹ்வின் உதவியும், ஒத்தாசையையும் பெறுவதற்கு அவன் தகுதியற்றவராவான். ஆனால் அவன் அல்லாஹ்வின் முன்னிலையில் மட்டுமே விழுகின்றபோது

**திருக்குர்ஆனிலிருந்து...**

*உம்முடைய இறைவன், தான் விரும்புபவருக்கு உணவைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், (தான் விரும்புபவருக்கு அவற்றைக்) குறைவாகக் கொடுக்கின்றான். நிச்சயமாக, அவன் தன் அடியார்களை நன்கு அறிந்து கொள்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான். (17:31)*

**முஹம்மது ஆதில்**

சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூலூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையே. இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்.... பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.*

**அட்வகேட் சலீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**

மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

அவனிடம் துஆ செய்கின்றபோது அல்லாஹ்வின் உதவியும் ஒத்தாசையையும் ஈர்க்கின்ற நிலையாக அவரது நிலை இருக்கும். அதாவது அல்லாஹ்வின் கருணையையும், உதவியையும் பெறக்கூடியவராக அவர் இருப்பார். அல்லாஹ் விண்ணிலிருந்து மனித உள்ளத்தின் பாதாளம் வரை பார்க்கின்றான். மனித உள்ளத்தின் ஏதாவதொரு மூலையில் இருள், அநீதி, ஷிர்க் மற்றும் பித்அத்தின் ஏதாவதொரு பங்கு இருக்கும் என்றால் அந்த மனிதன் செய்த துஆக்களையும், இறை வணக்கங்களையும் அவன் முகத்தில் வீசி எறிகின்றான். மனித உள்ளம் எல்லா வகையான மனயிச்சைகள் மற்றும் அநீதிகளிலிருந்து தூயதாக இருப்பதை அல்லாஹ் கண்டால் அத்தகைய நபருக்காக கருணையின் வாசலைத் திறந்து கொடுக்கின்றான். மேலும் அத்தகைய மனிதனை தனது நிழலின் கீழ் எடுத்து அவரைப் பராமரிக்கும் பொறுப்பை அவனே எடுத்துக் கொள்கிறான். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 396-397; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆக, நாம் நிரந்தரமாக பெற வேண்டிய தரம் இதுதான். அதனை நாம் பெற்றுக் கொண்டு செல்ல வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும். நமது இறை வணக்கங்கள் எப்பொழுதும் அல்லாஹ்வுக்காக மட்டுமான –தாகவே இருக்க வேண்டும். ரமலானிற்குப் பிறகும் கூட நாம் நமது இறை வணக்கத்தின் தரத்தை நிலைநாட்டக் கூடியவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால் அப்போதுதான் ஒவ்வொரு நொடிப்பொழுதும் அல்லாஹ்வின் நிழலின் கீழ் இருந்து அவனது பராமரிப்பின் பயனைப் பெறக்கூடியவர்களாக இருக்க முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு அன்னார் நம்மிடம் எத்தகைய தரத்தை விரும்புகின்றார்கள் என்பதை எடுத்துரைத்தவாறு அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: நீங்கள் இந்த அமைப்பில் இணைந்து என்னுடன் தொடர்பு வைத்திருப்பதன் நோக்கம் என்னவென்றால், அதன் மூலம் நன்னடத்தை மற்றும் இறையச்சத்தின் உயர் தரத்தை அடைய வேண்டும் என்பதாகும். எவ்வகையான குழப்பமும், தீங்கும், தீய நடத்தையும் உங்கள் பக்கம் கூட நெருங்கக் கூடாது. அவர்கள் ஐவேளை தொழுகைகளைப் பேண வேண்டும். அவர்கள் பொய் பேசக் கூடாது. அவர்கள் எவருக்கும் தமது நாவினால் துன்பம் தரக்கூடாது. அவர்கள் எவ்வகையான தீய நடத்தைக்கும் ஆளாகக் கூடாது. எவ்வகையான தீங்கு, அநீதி, குழப்பத்திற்கான எண்ணம் கூட அவர்களின் உள்ளத்தில் தோன்றக் கூடாது. எல்லா வகையான மன இச்சைகள் மற்றும் உணர்ச்சிகள் மற்றும் வீண் வேலைகளிலிருந்து விலகியிருக்க வேண்டும். இறைவனுடைய தூய உள்ளம் படைத்தவராகவும், தீங்கற்ற மனம் படைத்தவராகவும், எளிமையான இயல்பு கொண்ட அடியாராகவும் இருக்க வேண்டும். (மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 46-47) எல்லா தீமைகளும் எதிர்ப்பதற்கு தகுதியானதல்ல. எனவே பெரும்பாலும் கண்டும் காணாமல் இருத்தல் மற்றும் மன்னிப்பிற்கான பழக்கத்தை உங்களிடம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஒவ்வொரு சண்டை சச்சரவுக்கும் பதில் கொடுப்பது அவசியமில்லை.

பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ளுங்கள் (மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 48) என அன்னார் கூறுகின்றார்கள். எனவே இந்த நற்குணங்களை பழக்க வழக்கங்களை நிரந்தரமாக மேற்கொள்ளும்படி நமக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. நான் நோன்பாளி; எனவே நான் சண்டையிட விரும்பவில்லை எனக் கூறி சண்டை சச்சரவுகளில் இருந்து விலகினால் போதுமானதல்ல. மாறாக ரமலானின் பயிற்சியிலிருந்து பயனடைந்தவாறு உயர் நல்லொழுக்கங்களை நமது வாழ்க்கையின் நிரந்தர அங்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

அன்னார் இதனை மேலும் தெளிவுபடுத்திய –வாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: உங்களது உள்ளம் சூழ்ச்சிகளிலிருந்து தூய்மையாகவும், உங்கள் கைகள் அநீதிகளிலிருந்து தூயதாகவும் உங்களது கண்கள் அசுத்தங்களிலிருந்து தூயதாகவும் இருக்க வேண்டும். நேர்மை மற்றும் படைப்பினங்கள் மீதான அனுதாபத்தை தவிர்த்து உங்களிடம் வேறெதுவும் இருத்தல் கூடாது. (மஜ்முஆ இஸ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 48) அதாவது நேரான வழியில் நடப்பவர்கள் ஆகி படைப்பினத்தின் மீது அனுதாபம் காட்டுவர். கண்கள் எல்லா அசுத்தங்களிலிருந்தும் விலகி இருக்க வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் கூறியபடி இறைவன் உங்களிடம் எதிர்பார்ப்பதற்கேற்ப உங்கள் நிலையை நீங்கள் ஆக்கிக் கொண்டால் நிச்சயமாக அறிந்து கொள்ளுங்கள். இறைவன் உங்களுக்குரியவனாகவே இருப்பான். நீங்கள் தூங்கிக் கொண்டிருப்பீர்கள். இறைவன் உங்களுக்காக விழித்திருப்பான். நீங்கள் எதிரிகளிடம் இருந்து கவனமற்றிருப்பீர்கள். இறைவன் அவர்களைக் கண்டு அவர்களின் திட்டத்தை முறியடிப்பான். (கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 22)

ஆக, இவ்விஷயங்களை எப்போதும் கருத்தில் கொள்வது அவசியமாகும். இதனை அன்னார் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்துள்ளார்கள். நீங்கள் இவ்விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால் வெறும் பைஅத் போதுமானதல்ல. அன்னார் எந்த அளவுக்கு கவலையுடன் இதனை எடுத்துரைத்துள்ளார்கள் என்பதை பாருங்கள். அதன் சில பகுதியை எடுத்துரைக்கிறேன். நாம் எந்த அளவுக்கு அதன்படி அமல் செய்துள்ளோம் அல்லது அமல் செய்கின்றோம் என்பதை ஒவ்வொருவரும் தம்மைத்தாமே ஆய்வு செய்து கொள்ளட்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: உங்களுடைய அகமும், புறமும் ஒன்றாகாத வரை நீங்கள் இறைவனிடம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டீர்கள். பெரியோர்களாக இருந்து சிறியவர்களின் மீது கருணை காட்டுங்கள். அவர்களை அற்பமாகக் கருதாதீர்கள். நீங்கள் அறிவாளியாக இருந்து அறிவீனர்களுக்கு அறிவுரை கூறுங்கள். தற்பெருமையால் அவர்களை அவமானப்படுத்தாதீர்கள்.

அறிவு கிடைத்துள்ளதென்றால் பணிவான முறையில் அறிவுரை செய்யுங்கள். அதை தவிர்த்து உங்களின் பெருமையை பறைசாற்றாதீர்கள். உங்கள் அறிவை வெளிப்படுத்தி அவர்களை அவமானப்படுத்தக் கூடாது.

அன்னார் கூறுகின்றார்கள்: நீங்கள் செல்வந்தர்களாக இருந்து ஏழை எளியவர் –களுக்கு உதவி புரியுங்கள். தன்னலத்தால் அவர்கள் மீது அகங்காரம் கொள்ளாதீர்கள். அல்லாஹ் உங்களுக்கு செல்வத்தையும், வளத்தையும் வழங்கியுள்ளான் என்றால் ஏழை –களுக்கு உதவி செய்யுங்கள். அதை தவிர்த்து அவர்கள் மீது ஆணவம் கொள்ளாதீர்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நாசத்தை விளைவிக்கும் வழிகளைக் கண்டு அஞ்சுங்கள். இறைவனுக்கு எப்போதும் அஞ்சிக் கொண்டிருங் –கள். இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். படைப்பினங்களை வணங்காதீர்கள். உங்கள் எஜமானனாகிய இறைவன் பக்கம் உங்களை தொடர்புபடுத்திக் கொள்ளுங்கள். உலக இச்சைகளை விட்டு ஒதுங்கி விடுங்கள். அவனுக்காகவே ஆகி விடுங்கள். அவனுக்காகவே வாழ்வை கழியுங்கள். அவ்விறைவனுக்காக எல்லா விதமான அசுத்தங்களையும் பாவங்களையும் வெறுத்து விடுங்கள். ஏனெனில் அவன் தூய்மையாளன்.

இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டுமென்றால் அவன் தூயவன். எனவே எல்லா வகையான அசுத்தம் மற்றும் பாவத்தில் இருந்து வெறுப்பை உருவாக்குவது அவசியமாகும்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின் –றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர் –களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....

**மர்ஹூம் ஷேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

அன்னார் கூறுகின்றார்கள்: நீங்கள் இறையச்சத்துடன் இரவைக் கழித்ததாக ஒவ்வொரு காலைப்பொழுதும் உங்களுக்காக சாட்சி கூற வேண்டும். நீங்கள் பகற்பொழுதை இறையச்சத்துடன் கழித்ததாக ஒவ்வொரு மாலைப்பொழுதும் உங்களுக்காக சாட்சி கூற வேண்டும். உலகத்தின் சாபங்களைக் கண்டு நீங்கள் அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவை புகை மண்டலம் மறைவதைப் போல் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மறைந்து விடும். மேலும் அதனால் பகலை இரவாக்க முடியாது. மாறாக நீங்கள் விண்ணிலிருந்து இறங்கக்கூடிய அல்லாஹ்வின் சாபத்திற்கு அஞ்சுங்கள். ஏனெனில் அந்த சாபம் எவர் மீது விழுமோ அது அவரது இம்மை மறுமை ஆகிய ஈருலகையும் நாசமாக்கி விடும்.

நீங்கள் வெளிவேசம் செய்து உங்களை காப்பாற்றிக் கொள்ள முடியாது. பகட்டாக ஒரு அமலைச் செய்து தப்பிக்க முடியாது. ஏனெனில் உங்களை படைத்த அந்த இறைவனின் பார்வை மனித உள்ளத்தின் அடி ஆழம் வரை ஊடுருவிச் செல்லும். எனவே உங்களால் அந்த இறைவனை ஏமாற்றி விட முடியுமா? ஒருபோதும் முடியாது. எனவே நீங்கள் நேர்மையாளராகி விடுங்கள். தூயவராகி விடுங்கள். புனிதமானவர்களாகி விடுங்கள். உறுதியானவர்களாகி விடுங்கள். உங்களிடம் சிறிதளவு இருள் இருந்தாலும் அது உங்களின் முழு ஒளியையும் அகற்றி விடும். உங்களிடம் இருக்கும் ஒளியைக் கூட இருள் விலக்கி வைத்து விடும்.

ஏதாவது ஒரு வகையில் உங்களிடம் ஆணவமோ வெளி வேஷமோ சுயநலமோ அல்லது சோம்பலோ காணப்பட்டால் நீங்கள் சிறிதும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவர்களாகி விடுவீர்கள். நீங்கள் சில விஷயங்களை மட்டும் கடைபிடித்துக் கொண்டு நாம் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து முடித்து விட்டோம் என எண்ணி உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். ஏனெனில் உங்களிடம் முழுமையான ஒரு புரட்சி உருவாக வேண்டும் என இறைவன் விரும்புகிறான். உண்மையான நம்பிக்கையாளராக ஆக வேண்டும் என்றால் ஓர் உண்மையான புரட்சியை உங்களிடம் ஏற்படுத்த வேண்டும் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: மேலும் அவன் உங்களிடம் ஒரு வகை மரணத்தை விரும்புகிறான். அதன் பிறகு அவன் உங்களை உயிர்ப்பிப்பான்.

நீங்கள் ஒருவருக்கொருவர் விரைவாக சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்களது சகோதரர்களின் குற்றத்தை மன்னியுங்கள். ஏனென்றால் தனது சகோதரனிடம் சமாதானத்தை விரும்பாத மனிதன் தீயவன் ஆவான். அவன் துண்டிக்கப்படுவான். ஏனென்றால் அவன் பிரிவினையை உண்டாக்கு–கிறான். நீங்கள் எல்லா விதமான மன இச்சைகளை விட்டு விடுங்கள். உங்களுக்கு இடையிலான வெறுப்புகளை விட்டு விடுங்கள். 'தான்' என்ற அகந்தை மற்றும் மன இச்சைகளை விட்டு விடுங்கள். அதன் காரணமாக ஒருவருக்கொருவர் வெறுப்பை உருவாக்காதீர்கள்.

நீங்கள் உண்மையாளர்களாக இருந்து கொண்டு பொய்யர்களைப் போல் பணிவை மேற்கொள்ளுங்கள். இதனால் நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள். மன இச்சைகளை அதிகரித்துக் கொண்டு செல்வதை விட்டு விடுங்கள். ஏனெனில் எந்த வாசல் வழியாக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கின்றீர்களோ அவ்வாசல் வழியாக மன இச்சை கொண்ட மனிதரால் ஒருபோதும் நுழைய முடியாது. இறைவனின் வாயிலிருந்து வெளி வந்து நான் எடுத்துரைத்த இந்த விஷயங்களை ஏற்காதவன் மிகவும் பேறிழந்தவனாக இருக்கின்றான். வானத்தில் உங்களோடு இறைவன் திருப்தி அடைய வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் ஒரே வயிற்றிலிருந்து பிறந்த இரு சகோதரர்–களைப்போல் நீங்கள் அனைவரும் ஆகி விடுங்கள். உங்களில் எவர் தனது சகோதரனின் குற்றத்தை அதிகம் மன்னிப்பாரோ அவரே பெரும் கண்ணியத்திற்குரியவர் ஆவார். இதற்கு மாற்றமாக மன்னிக்காமல் பிடிவாதம் செய்பவர் துர்பாக்கியசாலி ஆவார். ஆகவே அவருக்கு என்னோடு எந்த தொடர்பும் இல்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: தீயவன் இறைவனின் நெருக்கத்தைப் பெற முடியாது. ஆணவம் கொண்டவன் அவனது நெருக்கத்தைப் பெற முடியாது. அநீதியிழைப்பவன் இறை நெருக்கத்தைப் பெற முடியாது. நம்பிக்கை துரோகி அவனது நெருக்கத்தைப் பெற முடியாது. அவனது பெயருக்கு களங்கம் விளைவிக்கும் விஷயத்தில் தன்மான உணர்வை வெளிப்படுத்தாதவர் இறை நெருக்கத்தைப் பெற முடியாது.

அன்னார் கூறுகின்றார்கள்: தூய்மையற்ற அசுத்தமான ஒவ்வொரு கண்ணும் அவனை விட்டு விலகியுள்ளது. தூய்மையற்ற உள்ளம் அவனை அறியாதிருக்கிறது. எவர் அவனுக்காக நெருப்பில் விழுவாரோ அவர் நெருப்பிலிருந்து காப்பாற்றப்–படுவார். எவர் அவனுக்காக அழுகின்றாரோ அவர் சிரிப்பார். எவர் அவனுக்காக உலகத்தை இழக்கத் துணிவாரோ அது அவருக்குக் கிடைக்கும்.

நீங்கள் உண்மையான உள்ளத்துடனும், முழு நம்பிக்கையுடனும் தீவிர முயற்சியுடனும் இறைவனுக்கு நண்பர்களாகி விடுங்கள். அப்போது அவனும் உங்களுடைய நண்பனாகி விடுவான். வானத்தில் உங்கள் மீது கருணை காட்டும் பொருட்டு நீங்கள் மனைவியர் மீதும், உங்களின் ஏழை சகோதரர்கள் மீதும் கருணை காட்டுங்கள். உண்மையாக நீங்கள் அவனுக்காகவே ஆகி விடுங்கள். அப்போது அவனும் உங்களுக்காகவே ஆகி விடுவான். வானத்திலிருந்து கட்டளை இறங்காத வரை எவ்வித ஆபத்தும் பூமியில் உண்டாவதில்லை. மேலும் வானத்திலிருந்து கருணை இறங்காத வரை எந்தவொரு ஆபத்தும் நீங்குவதில்லை. எனவே நீங்கள் கிளையை பிடிப்பதற்குப் பகரமாக வேரை பற்றிப் பிடிப்பதே அறிவுடைமையாகும். உங்களுக்குரிய ஒரு முக்கிய போதனை என்னவென்றால் திருக்குர்ஆனை கைவிடப்பட்ட வேதத்தைப் போல் விட்டு விடாதீர்கள். ஏனெனில் உங்களின் வாழ்வு அதிலேயே அடங்கியுள்ளது. திருக்குர்ஆனின் போதனைகளை எப்போதும் கடைபிடியுங்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: எவர்கள் திருக்குர்ஆனிற்கு கண்ணியம் அளிப்பார்களோ அவர்கள் விண்ணில் கண்ணியம் பெறுவர். எவர்கள் எல்லா வகையான ஹதீதுகள் மற்றும் ஏனைய கூற்றுக்களை விட திருக்குர்ஆனிற்கு முன்னுரிமை வழங்குவார்களோ அவர்கள் வானத்தில் முன்னுரிமை பெறுவர். பூமியில் திருக்குர்ஆனைத் தவிர மனித குலத்திற்கு வேறு எந்த வேதமும் இல்லை. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைத் தவிர ஆதமின் சந்ததிகளுக்கு இனி எந்த இறை தூதரும், பரிந்துரையாளரும் இல்லை. எனவே நீங்கள் அந்த மாபெரும் கம்பீரமான நபியுடன் உண்மையான நேசம் கொள்ள முயலுங்கள். அவருக்குக் கொடுக்கப்படும் மதிப்பை விட மேலான மதிப்பை வேறு எவருக்கும் வழங்காதீர்கள். அப்போதுதான் நீங்கள் வானத்தில் இரட்சிக்கப்பட்டவர்களாக எழுதப்–படுவீர்கள். இரட்சிப்பு என்பது மரணத்திற்குப் பிறகு வெளிப்படும் ஒன்றல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். உண்மையான இரட்சிப்பானது தன் ஒளியை இவ்வுலகிலேயே வெளிப்படுத்திக் காட்டி விடுகிறது. இரட்சிப்பு பெற்றவர் யார்? இறைவன் உண்மையாக இருக்கின்றான் என்றும், இறைவனுக்கும் அவனது அனைத்து படைப்பினங்களுக்கும் இடையில் பரிந்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள். (25:68)*

**லஜ்னா இமாயில்லாஹ்**

ஆதம்பாக்கம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறைக் கொள்கை, இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று தன் உடன்பிறப்புகளுக்கும் அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.*

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*(நிராகரிப்பவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் (இறைத் தூதை) மறுத்து விட்டதால் தண்டனை உங்களைப் பற்றிக் கொள்ளும். (25:78)*

**அன்ஸருத்தீன்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

பேசக்கூடியவர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களே என்றும், வானத்தின் கீழ் அவர்களுக்கு நிகரான வேறு எந்த நபியும் இல்லை என்றும், திருக்குர்ஆனிற்கு நிகரான வேறெந்த வேதமும் இல்லை என்றும் நம்பிக்கை கொள்பவரே இரட்சிப்புப் பெற்றவராவார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவரும் என்றென்றும் உயிர் வாழ வேண்டும் என அல்லாஹ் விரும்பவில்லை. ஆனால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த திரு நபி (ஸல்) அவர்கள் நிரந்தரமாக உயிரோடு இருக்கின்றார்கள். (கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 12- 14)

இந்த விஷயங்களுக்குப் பிறகு அன்னார் மீண்டும் இதனை வலியுறுத்தியவாறு கூறுகின்றார்கள்: இதன் பிறகு நான் மீண்டும் கூறுகிறேன். நாம் பைஅத் செய்து விட்டோம் என்ற எண்ணம் கொள்ளாதீர்கள். புறம் என்பது ஒரு பொருட்டே அல்ல. அல்லாஹ் உங்கள் உள்ளத்தையே பார்க்கின்றான். (கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 18) எனவே நம்மில் ஒவ்வொருவரும் இந்த உறுதிமொழியை எடுத்தவாறு ரமலானிலிருந்து வெளி வர வேண்டும். அல்லாஹ்வும், அவனது தூதர் (ஸல்) அவர்களும் என்னென்ன விஷயங்களைக் கூறியுள்ளார்களோ, அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நமக்கு தெளிவுபடுத்தி தந்து விட்டார்கள். எனவே அதனை கருத்தில் கொண்டு அதற்கேற்ப நாம் நமது வாழ்வினை கழிக்க முயல வேண்டும். அவ்வாறு செய்தால்தான் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றிற்கேற்ப ரமலானை கழிக்க நாங்கள் முயற்சி செய்தோம் என நம்மால் கூற முடியும். அல்லாஹ் அதற்கான பாக்கியத்தை நமக்கு தந்தருள்வானாக.

தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை நடத்துவேன். முதல் ஜனாஸா சவுத்ரி ஸுஹூர் அஹ்மது சாஹிப் பாஜ்வா அவர்களின் துணைவியார் முஷ்தாக் ஸுஹூர் சாஹிபா உடையதாகும். 12 ஜூன் அன்று இரவு 8.45 மணி அளவில் ரப்வாவில் 91 –வது வயதில் மரணம் நிகழ்ந்துள்ளது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் தந்தையார் சவுத்ரி இனாயத்துல்லாஹ் சாஹிப் ஆவார். அன்னார் 14 –வது வயதில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கையில் பைஅத் செய்தார்கள். மர்ஹூமாவின் நிக்காஹ் 1944 ஆம் ஆண்டு சவுத்ரி ஸுஹூர் அஹ்மது பாஜ்வா அவர்களுடன் நடைபெற்றது. மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் ராஜிகி அவர்கள் நிக்காஹ் நடத்தினார்கள். அதில் நீண்ட குத்பா கொடுத்தார்கள். அதில் அல்லாஹ்வின் சில குறிப்பிட்ட அருட்களைக் குறிப்பிட்டார்கள். எவ்வாறிருப்பினும் அது ஒரு நீண்ட குத்பாவாகும். மேலும் அந்த நிக்காஹ்வின் மூலமாகவே அன்னாரின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் மேலும் பரவியது.

அல்லாஹ், மர்ஹூமாவிற்கு 3 மகன்களையும் 2 மகள்களையும் அருளியுள்ளான். ஒரு மகன் அமெரிக்காவில் வாழ்க்கையை அர்ப்பணித்தவராக உள்ளார். சவுத்ரி ஸுஹூர் அஹ்மத் பாஜ்வா சாஹிப் இங்கிலாந்தில் முபல்லிக் ஆக இருந்துள்ளார்கள். 1955 –ல் பாகிஸ்தானின் ரப்வாவிற்குத் திரும்பினார்கள். பின்னர் நாயிப் நாஸிர் இஸ்லாஹ்–இர்ஷாத் ஆக நியமிக்கப்பட்டார்கள். நீண்ட காலம் நாஸிர் உமூரே ஆமாவாகவும் இருந்தார்கள். மூன்றாவது கலீஃபாவின தனிச்செயலராகவும் இருந்துள்ளார்கள். நாஸிர் தஃலீமுல் குர்ஆனாகவும் இருந்தார்கள். இறுதியில் மரணமடையும்போது சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சத்ர் ஆகவும் இருந்தார்கள்.

மர்ஹூமா முஷ்தாக் ஸுஹூர் சாஹிபா தனது வாழ்வை அர்பணித்த கணவருடன் மிக அழகிய முறையில் வாழ்க்கையை கழித்தார்கள். தனது கணவருக்கு கஷ்டத்தை தரும் எந்த விஷயத்தையும் அவர்கள் வேண்டவில்லை. 1944 –ல் அவர்களின் திருமணம் நடைபெற்றது. அடுத்த வருடம் 1945 –ல் மகன் பிறந்தார். மகனுக்கு வயது 1 ஆக இருந்தது. அப்போதுதான் அன்னார் இலண்டனிற்கு பாஜ்வா சாஹிப் முபல்லிக் ஆக அனுப்பி வைக்கப்பட்டார். 1947 –ல் இந்திய பாகிஸ்தான் பிரிவினையின்போது பாஜ்வா சாஹிப் இலண்டனில் இருந்தார்கள். ஆனால் அவர்களின் மனைவி அங்கு இருந்தார்கள். அப்போது அவர்களுக்கு பல கஷ்டங்களைச் சந்திக்க நேரிட்டது. 1951–1955 வரை பாஜ்வா சாஹிபின் மனைவியும் பேஜ்வா சாஹிபுடன் இங்கிருந்த முபல்லிகின் பொருளாதார நிலை மோசமாக இருந்தது. ரொம்ப கஷ்டப்பட்டே வாழ்க்கை கழிந்தது. ஆனால் மர்ஹூமா ஒருபோதும் எந்த முறையீடும செய்ததில்லை; மகிழ்ச்சியாகக் கழித்தார்கள்.

அடுத்து ரப்வாவில் முதலில் குவார்ட்ரஸில் இருந்தார்கள். பின்னர் வீடு கட்டி சொந்த வீட்டில் குடியேறினார்கள். பொறுப்பான குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார். எனவே எப்போதும் ரப்வாவில் படிப்பதற்காக வந்த மாணவர்களின் வீட்டில் இருந்தார்கள். 15, 20 நபர்கள் வீட்டில் இருந்து வந்தார்கள். மிக ஆர்வத்துடன் விருந்தோம்பல் செய்து வந்தார்கள்.

அன்னாரது மகன் எழுதியுள்ளார்: தினமும் தஹஜ்ஜுத் தொழுது வந்தார்கள். ஃபஜ்ர் தொழுத பிறகு உரத்த குரலில் குர்ஆன் ஓதுவது வழக்கமாக இருந்தது. மாடுகள் மற்றும் கால்நடைகளை வளர்த்து வந்தார். தெருவாசிகள், ஏழைகள் அவர்கள் வீட்டில் இருந்து பால் மற்றும் லஸ்ஸியை பெற்றுச் செல்ல வந்து விடுவார்கள். பெரிய வரிசையே நிற்கும். வீட்டுப் பணிகளுக்கு மத்தியிலும் சமூகத்தில் நல்ல தொடர்பு வைத்திருந்ததும் அன்னாரின் சிறப்பாக இருந்தது. திருக்குர்ஆன் மீது அன்னாருக்கு அதிக நேசம் இருந்தது. ஹஸ்ரத் சய்யிதா மர்யம் சித்திகா சாஹிபா அதாவது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மனைவி ஆவார்கள். அன்னாரிடம் அல்குர்ஆன் ஓதக் கற்றுக் கொண்டார்கள். மொழியாக்கமும் கற்றார்கள். எப்போதும் எல்லாரிடமும் நல்ல முறையில் நடந்து வந்தார்கள். அன்னாரின் விருந்தோம்பலை ஏற்கனவே கூறி விட்டேன். இங்கிருந்தபோது விருந்தோம்பலுக்கென்று எந்த ஃபண்டும் இல்லாமல் இருந்தது. ஆனால் விருந்தாளிகளுக்கு தன்னால் இயன்ற பொருட்களை வாங்கி விருந்தோம்பல் செய்து வந்தார்.

பாகிஸ்தானின் நாயிப் நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஸுஹூர் அஹ்மத் பேஜ்வா சாஹிப் அவர்களின் காலக்கட்டத்தில் அன்னாருடன் தொடர்பு இருந்தது. மர்ஹூமா பெரிய குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தபோதிலும் வாழ்க்கையை அர்பணித்த ஒருவரை மணமுடித்து அவரது வீட்டிற்கு வந்த பிறகு மிக எளிமையான வாழ்வைக் கழித்தார்கள். தனது வீட்டில் வேலைக்காரர்கள் இருந்தனர். அவர்கள் மூலம் வீட்டு வேலை நடந்தது. ஆனால் இங்கு வந்து வீட்டு வேலையை அன்னாருக்கு தாமே செய்ய நேரிட்டது; செய்தார்கள். இலண்டனில் தங்கியிருந்தபோது மிகக் கஷ்டமாகத்தான் வாழ்க்கை கழிந்தது. கடும் குளிர் காலத்தில் வீட்டில் Heater, Geezer எல்லாம் இருந்ததில்லை. பட்ஜெட்டிற்கு உட்பட்ட என்ன பணி செய்ய முடியுமோ அதனையே செய்ய நேரிட்டது. எனவே குளிரைத் தாங்கிக் கொண்டார்கள். சவுத்ரி சாஹிப் அவர்களும் கூட விதிமுறைகளைக் கடுமையாகப் பேணுபவராக இருந்தார்கள். எளிமையாக வாழ்வைக் கழித்தார்கள். 1955 –ல் பாஜ்வா சாஹிப் இலண்டலிருந்து ரப்வா திரும்புமாறு கட்டளையிடப்பட்டது. மர்ஹூமா அந்நாட்களில் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். டாக்டர்கள் Bed Rest எடுக்குமாறு கூறியிருந்தார்கள். ஆனால் நாடு


**திருக்குர்ஆனிலிருந்து...**

*இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம். (40:52)*

**மர்ஹூமா இலைஹி ஜைனப் கனி**

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும்.*

**மர்ஹூம் M.A.S. முஹையுத்தீன் அலி**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர் -களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)*

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

திரும்புமாறு கட்டளை வந்தவுடன் சவுத்ரி சாஹிப் அதற்கு ஆயத்தமாகி விட்டார்கள். மனைவிக்கு உடல் நலம் சரியில்லை. இரண்டாம் கலீஃபா (ரலி) அவர்களிடம் அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள் என மக்கள் கூறினர். ஆனால் சவுத்ரி சாஹிப் அவர்களோ அதற்கு முடியாது; கட்டளை வந்து விட்டது. எனவே திரும்பிச் செல்ல வேண்டும் எனக் கூறி விட்டார்கள். மனைவியும் எந்த மறுப்பும் கூறவில்லை. கணவருடன் நாடு திரும்ப ஆயத்தமாகி விட்டார்கள். அக்காலத்தின் பயணமும் கடினமாக இருந்தது. இருந்தபோதிலும் ஆயத்தமாகி விட்டார்கள். அல்லாஹ் மர்ஹூமாவின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அன்னாருடன் அல்லாஹ் கருணையுடனும் மன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. அன்னாரின் நன்மைகளைத் தொடரச் செய்யும் பாக்கியத்தை அல்லாஹ் அன்னாரின் சந்ததிகளுக்கும் வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய அப்துஹூ பக்ர் சாஹிப் உடையது ஆகும். எகிப்தைச் சார்ந்தவர். 12 ஜூன் அன்று மாரடைப்பால் 41 –வது வயதில் இறந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

எகிப்து ஜமாஅத்தின் சத்ர் டாக்டர் Hatamhiloni Shafi சாஹிப் எழுதுகின்றார்கள்: மர்ஹூம் 2011 –ல் பைஅத் செய்தார். அரபி மற்றும் மார்க்க விஷயங்களின் ஆசிரியராக இருந்தார். ஆனால் தமது பணியை ராஜினாமா செய்து விட்டு ஜமாஅத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அன்னார் எகிப்தின் தெற்குப் பகுதியில் மிகவும் அறிவீனமான பழியுணர்ச்சி கொண்ட சூழலில் பிறந்தார்கள். ஆனாலும் சமாதானத்தை விரும்பக்கூடியவராக இருந்தார்கள். கடுமை காட்டுதல் மற்றும் சண்டையிடுதலை மிகவும் வெறுத்து வந்தார்கள். பைஅத்திற்கு முன்னர் அஹ்மதி அல்லாத ஆலிம்களின் புத்தகங்கள் எந்த அளவிற்கு ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருந்தது என்றால் தமது மார்க்கம் தமக்கு தவறான விஷயங்களை கற்றுக் கொடுத்திருப்பதாக அஞ்சி வந்தார்கள். குறிப்பாக மஸீஹ் உயிருடன் இருப்பது சிலுவை மரணம் போன்ற கொள்கைகள் ஆகும். அன்னாருக்கு ஒரு கிறிஸ்தவ நண்பர் சில கிறிஸ்தவ சேனல்களுக்கான நம்பரை கொடுத்தார். நீங்கள் இந்த நிகழ்ச்சியைப் பாருங்கள். அதன் மூலம் மற்றவரிடம் இல்லாத சிறப்புகள் மஸீஹிடம் இருப்பது உங்களுக்கு தெரிந்து விடும் எனக் கூறினார். அந்த தேடுதலில்தான் அன்னாருக்கு M.T.A –வும் கிடைத்தது. அல்லாஹ் அன்னாருக்கு நேர்வழி வழங்க நாடியிருந்தான்.

மர்ஹூம் தனது பைஅத்தைப் பற்றிக் குறிப்பிட்டவாறு கூறுகின்றார்: நான் ஒரு நிகழ்ச்சியில் முஸ்தஃபா ஸாபித் சாஹிப் மர்ஹூமைக் கண்டேன். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் சிலுவையில் மரணிக்கவில்லை. மாறாக, மயக்க நிலையில் இருந்தார். பின்னர் கிழக்கு நோக்கி அன்னார் ஹிஜ்ரத் செய்தார். பின்னர் இயற்கையாக மரணித்தார் என அன்னார் கூறினார். நான் அப்போது படுத்துக் கொண்டு டி.வி பார்த்துக் கொண்டிருந்தேன். இதனைக் கேட்டதும் எழுந்து நேராக அமர்ந்து கொண்டேன். கவனமாக விஷயத்தைக் கேட்டேன். அது அல்ஹிவாருல் முபாஷிர் நிகழ்ச்சியாக இருந்தது. உண்மை எனக்கு வெளிப்பட்டவுடன். நான் அல்லாஹ் அக்பர் என சப்தமாக முழக்கமிட்டேன். எனக்கு உண்மை கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தேன். இதற்கிடையில் ஷரீஃப் உஹ்தே சாஹிப் அறிவித்தார்கள். நாம் இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கஸீதாவை செவியேற்றோம் எனக் கூறினார். அதாவது நிச்சயமாக மேன்மைமிக்க, மகத்துவமிக்க அல்லாஹ்வின் புறமிருந்து நான் வந்துள்ளேன் என்பது அதன் பொருளாகும். அத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படமும் காட்டப்பட்டது. அதனை டி.வி –யில் நான் Pause செய்து நிறுத்தி வைத்து உற்று நோக்கினேன். நான் பார்த்தபோது புரிந்து கொண்டேன். இதே முகத்தையே நான் சிறிது காலம் முன்பு நிலவில் இருப்பது போன்று கனவில் கண்டேன். இந்த தருணம் மிகவும் அழகிய தருணமாகும். மகிழ்ச்சி அளவில்லாததாக இருந்தது. அதன் பிறகு நான் தொடர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்த்து வந்தேன். 3 நாட்கள் கழிந்து மஸீஹ் மரணம், சிலுவையிலிருந்து காப்பாற்றிய விவகாரம், மற்றும் ஹிஜ்ரத் போன்ற விவகாரங்களை எனக்குப் புரிய வைத்து விட்டான். மர்ஹூம் பைஅத் செய்த பிறகு ஊர்க்காரர்கள் ஊரை விட்டு விரட்டி விட்டனர். அறிந்தவர்கள் அனைவரும் மிகவும் தொல்லை கொடுத்தனர்.

ஆனால் அன்னார் உண்மையை விட்டு அகலவில்லை. தினமும் ஈமானில் முன்னேறிக் கொண்டே சென்றார். உறுதிப்பாடு அன்னாருக்கு கிடைத்துக் கொண்டே சென்றது. 4 ஆண்டுகளுக்கு முன் ஆசிரியராக பணிபுரிந்த பள்ளியிலிருந்து விலகி ஜமாஅத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். மிகப் பணிவான, எளிமையான மனிதர். நல்லொழுக்கமிக்கவர். தூயவர். அசாதாரண வகையில் கட்டுப்படக் கூடியவர். புது அஹ்மதிகளுக்கான பொறுப்பாள –ராக இருந்தார். அன்னாருக்கு அல்லாஹ் பொறுமை, மென்மை மற்றும் எதிர் தரப்பை தனது கூற்றை ஏற்கும்படி செய்யும் சிறப்பான ஆற்றல்களை வழங்கி இருந்தான். கிலாஃபத்துடனும் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்.

மர்ஹூம் ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஓர் அஹ்மதி பெண்ணை மணமுடித்தார். அன்னாரின் மரணத்திற்குப் பிறகு விதவை மனைவியைத் தவிர 4 வயது மகள் ஸய்னப் மற்றும் 2 வயது மகன் முஹம்மதை மர்ஹூம் தனது நினைவாக விட்டுச் சென்றுள்ளார். அன்னாரின் மகன் வக்ஃபே நவ்வில் இணைந்துள்ளார் – மாஷாஅல்லாஹ். அல்லாஹ் அன்னாருடன் மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அன்னாரின் மனைவி மக்களுக்கு அல்லாஹ்வே பராமரிப்பாளனாக இருப்பானாக. அன்னாரின் நன்மைகளைத் தொடரும் பாக்கியத்தை மனைவி மக்களுக்கும் அல்லாஹ் வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலே இருப்பர். இறைவன் கூறுகிறான். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராகவே இருப்பர். (17:73)*

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் விளைவி)னாலே ஆகும். அவன் (உங்கள் பாவங்களுள்) அதிகமானவற்றை மன்னிக்கிறான். (42:31)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்


S. MABU
87541 71700
81240 22479
90955 89992
78719 66352


STAR ORGANIC
TERRACE GARDEN DIVISION

- Panchagavya
- Pest Repeller
- See Veed Extract
- All kinds of garden tools

Email: Starorganicmabu@gmail.com
THARPOLIN + POULTRY EQUIPMENTS SALES
TIRUNELVELI DIST.

93600 05888
78716 00664

IBR
Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.


**திருக்குர்ஆனிலிருந்து...**

*மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களது இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால், நீங்கள் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)*

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மனிதன் நல்லதைக் கேட்பவதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால், அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவன் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து விடுகின்றான். (41:50)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

# கனடா பாராளுமன்றத்தில் ஸய்யிதுனா ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் வருகையின் போது நடைபெற்ற நிகழ்ச்சியில் 'ஸர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் அவார்டு' பற்றிய அறிவிப்பு செய்யப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்நிகழ்ச்சியில் உரை நிகழ்த்தினர்.

*17 அக்டோபர் 2016 அன்று ஸய்யிதுனா ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கனடாவின் பாராளுமன்றமான Parliment Hill -ற்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் அவர்களுக்கு பாராளுமன்றத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் பல்வேறு உறுப்பினார்களும் அமைச்சர்களும் ஹுஸூர் அவர்களைச் சந்தித்தனர். உலகின் நிலைமைகள் தொடர்பாகவும் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாகவும் ஆன்மாவிற்கு எழுச்சியூட்டக்கூடிய சொற்பொழிவை ஹுஸூர் அவர்கள் நிகழ்த்தினார்கள். ஹுஸூர் அவர்களின் இந்த சொற்பொழிவை ஆலிம்களும், அரசியல்வாதிகளும் வாழ்வின் பல்வேறு துறைகளுடன் தொடர்புள்ளவர்களும் மிகவும் விரும்பினர். தங்களது சிறந்த தாக்கங்களை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். ஹுஸூர் அவர்களின் இன்றைய அலுவல்கள் ஈமானுக்கு மிகவும் எழுச்சியூட்டக்கூடியதாக இருக்கின்றது. இதைப் பற்றிய விபரங்கள் வாசகர்களின் பயனைக் கருத்தில் கொண்ட-வாறு இனி வரும் இதழ்களில் வெளியிடப்படும்.*

### ஐந்தாம் பாகம்

நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய ஷேக் அப்துல் ஹாதி சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் திலாவத் ஓதினார்கள். அதற்குப் பிறகு அதன் ஆங்கில மொழியாக்கத்தையும் வாசித்தார்கள்.

இதற்குப் பிறகு ஆஸிஃப் கான் சாஹிப் (வெளி விவகாரச் செயலர்) அவர்கள் அறிமுக சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவர்கள் தமது சொற்பொழிவில் இன்று இங்கு நாம் ஜான் மேக்டோனல்ட் கட்டடத்தில் அமர்ந்துள்ளோம். நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தரப்பிலிருந்து கனடாவின் அரசாங்கத்திற்கும், இன்றைய நிகழ்ச்சிகளை வடிவமைத்துத் தந்துள்ள பாராளுமன்றத்தின் *Freindship Association* -ன் தலைவரான *Jody sugro* அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கின்றோம். அதில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், பல்வேறு நாடுகளின் தூதுவர்கள், மார்க்கத் தலைவர்கள், ஏனைய துறைகளுடன் தொடர்புடைய விருந்தினர்கள் ஆகியோர் அடங்குவர் என்று கூறினார்கள்.

## ஸர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் அவார்டு

பொதுமக்களுக்கு தொண்டு செய்ததற்காக 'ஸர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் அவார்டு' வழங்கப்படுகின்ற நிகழ்ச்சி ஆரம்பத்தில் இருந்தது. இந்த அவார்டு பற்றிய அறிவிப்பு கடந்த வாரம் கனடாவின் ஆண்டு மாநாடு நடைபெற்ற சந்தர்பத்தில் செய்யப்பட்டது. அம்மாநாட்டில் 24 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். பொதுத் துறைகளிலும் மனித இனத்திற்கும் வழக்கத்திற்கு மாற்றமாக பல அரிய தொண்டுகளைச் செய்திருப்பவர்களுக்கு 'ஸர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் அவார்டு' வழங்கப்படுகின்றது.

ஸர் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் பாகிஸ்தானின் தோற்றுனர்-களில் ஒருவராவார்கள். பாகிஸ்தானின் அரசியல் சாசனத்தை அன்னார்தான் எழுதினார்கள். அவர்கள் பாகிஸ்தானின் முதல் வெளி விவகாரத்துறை அமைச்சராக இருந்தவர்கள் ஆவார்கள். ஐக்கிய நாட்டு சபையில் பாகிஸ்தானின் பிரநிதியாக இருக்கின்ற பெருமையையும் அன்னார் பெற்றிருந்தார்கள். 1962 -ல் ஐக்கிய நாட்டு சபையின் *General Assembly* -யின் தலைவராக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1963 முதல் 1970 வரை அவர்கள் *Hague* -யிலுள்ள சர்வதேச நீதிமன்றமான உலகக் கோர்ட்டின் தலைமை நீதிபதியாக தொண்டாற்றியுள்ளார்-கள். உலக அளவில் மட்டும் வெற்றி பெற்றவராக அவர்கள் இருக்கவில்லை. மாறாக, அவர்களுக்கு மார்க்க அளவிலும் நல்ல புலமை இருந்தது. அவர்கள் கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட அஹ்மதியாக இருந்தார்கள். சிறு வயதிலேயே அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தாலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் அவர்களது கைகளில் பையத் செய்ததிலும் அவர்களுக்கு பெருமை இருந்தது. தமது வாழ்க்கையில் எண்ணற்ற வெற்றிகளைப் பெற்ற பிறகும் கூட அவர்கள் மிகவும் எளிமையாகவும் பணிவுடனும் தமது வாழ்க்கையைக் கழித்து வந்தார்கள். அஹ்மதிய்யத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் தனிச் சிறப்புமிக்க மனிதராகத் திகழ்ந்த நோபல் பரிசு பெற்ற டாக்டர் அப்துஸ்ஸலாம் சாஹிப் அவர்கள் ஸர் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள். ஓய்வு பெற்ற பிறகு ஸர் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள், தான் சேர்த்து வைத்திருந்த செல்வம் முழுவதையும் ஆதரவற்றவர்களுக்கு உதவுகின்ற பணிகளுக்காக அர்ப்பணித்து விட்டார்கள். எனவே, எவரிடம் கலப்பற்ற தன்மையுடன் சமுதாயத்திற்கும் மனிதயினத்திற்கும் தொண்டாற்றுகின்ற உணர்வு மிகுதியாக காணப்படுகின்றதோ அத்தகைய நபருக்கே 'ஸர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவார்டு' வழங்கப்படுகின்றது.

இந்த வருடம் எந்த நபருக்கு இந்த அவார்டு வழங்கப்படுகிறதோ அவர்கள் கல்வி மற்றும் மனித உரிமைகளை நிறைவேற்றும் பணிகளில் மிக நீண்ட காலமாக தொண்டு புரிந்தவர் ஆவார்கள். 1970 மற்றும் 1980 -ல் அன்டாரியோவின் உச்ச நீதிமன்றத்தில் இவர்களது நியமனம் இருந்தது. 1999 -ல் கனடாவின் உச்ச நீதிமன்றத்தில் இவர்கள் பணியமர்த்தப்பட்டார்கள். இவ்வருடம் இந்த பரிசை பெறுகின்ற இந்த நபர் 27 பல்கலைக் கழகங்களில் பரிசுகளைப் பெற்றுள்ளார். மனித உரிமைகளைப் பெற்றுத் தருகின்ற பணிகளில் இவர்களது அயராத உழைப்பு தொடர்ந்து இருந்து வருகின்றது. 2004-ல் ஓய்வு பெற்ற பிறகு ஐக்கிய நாட்டு சபையில் மனித உரிமைகளின் *High Commissioner* ஆக அவர்கள் நியமிக்கப்-பட்டார்கள். தைரியமுள்ள வீரமிக்க தலைவியாக அவர்கள் 2007 முதல் *"Companion of the order of Canada"* வாக பணியாற்றி வருகின்றார்-கள். எனவே, மிகுந்த மகிழ்ச்சியுடன் 2016 -ஆம் ஆண்டிற்கான 'ஸர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் அவார்டு' மாண்புமிகு லூயீ ஆர்பர் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் மதிப்பிற்குரிய லூயீ ஆர்பர் அவர்களுக்கு இந்த அவார்டை வழங்கினார்கள். மதிப்பிற்குரிய லூயீ ஆர்பர் அவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்:

கண்ணியத்திற்குரிய கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே! கண்ணியத்திற்குரிய விருந்தினர்-களே! கண்ணியத்திற்குரிய தாய்மார்களே!

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*ஓரிறைக் கொள்கை ஓர் ஒளியாகும். அது அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வொரு அணுவிலும் பரவி விடுகிறது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனின் தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்?*

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்குக் கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

சகோதரர்களே! இந்த அவார்டு எனது கண்ணியத்திற்குக் காரணமாக இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தியவாறு நான் சில சொற்களைக் கூற விரும்புகின்றேன். இந்த அவார்டு ஒரு மகத்தான சிந்தனையாளராகவும், வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும், மகத்தான தூதுவராகவும் இருந்த ஒரு மாமனிதரின் பெயரில் வழங்கப்படுகின்றது. இந்த பெயருடன் எனது தொடர்பு இருந்து வர வேண்டும் என்ற இந்த விஷயமும் எனது கண்ணியத்திற்குக் காரணமாக இருக்கின்றது. ஏனென்றால், ஸர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் சர்வதேச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக இருந்துள்ளார்கள். நான் இந்த நீதிமன்றத்தின் ஓர் உறுப்பினராக இருந்தேன். நான் இதன் பக்கமே உங்களுக்கு கவனமூட்ட விரும்புகின்றேன். எனக்கு முதன் முறையாக அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றிய அறிமுகம் ஏற்பட்ட போது அந்த சமயத்தில் ஐக்கிய நாட்டு சபையில் மனித உரிமைகளின் ஹை கமிஷனராக நான் இருந்து வந்தேன். ஜெனீவாவிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தின் குழு ஒன்றுடன் எனது சந்திப்பு நிகழ்ந்தது. அந்த சமயத்திலிருந்து இந்த துன்பமான நிலைமைகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் அமைதியை வளர்ச்சியடைய செய்வதற்காக செய்து வரும் முயற்சிகளைப் பார்த்து நான் தாக்கத்திற்கு ஆளானேன். இன்று உங்களுக்கு இந்த மிகவும் அழகான மாலை நேரம் அருளுக்குரியதாக இருக்கட்டும்.

இதற்குப் பிறகு *Minister of Science* ஆக இருக்கின்ற மாண்புமிகு கிரிஷ்டி டிங்கன் அவர்கள் உரை நிகழ்த்தியவாறு இவ்வாறு கூறினார்கள்: கண்ணியத்திற்குரிய கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே! அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களே! மேலவை உறுப்பினர்களே! கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே! நண்பர்களே! நான் உங்கள் அனைவருக்கும் ஸலாம் கூறுகின்றேன். உங்களை வரவேற்கின்றேன். அஸ்ஸலாமு அலைக்கும். என் பெயர் கிரிஷ்டி டிங்கன் ஆகும். இன்று நான் உங்களைச் சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவரும் ஐந்தாவது கலீஃபாவாகவும் இருக்கின்ற கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இன்று இங்கு பாராளுமன்றத்திற்கு வருகை தந்து அவர்கள் எங்களுடன் இருப்பது எங்கள் நற்பாக்கியமாகும். *Parliment Hill* -ன் எல்லா உறுப்பினர்களும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் அவர்களது ஜமாஅத்தின் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்கும் அவர்களுக்கு ஆதரவாக இருப்பதைக் காட்டுவதற்காகவும் இங்கு வந்துள்ளனர். கனடாவின் அடையாளம் *Multi Culturalism* ஆகும். பல்வேறு நிறங்களையும் இனங்களையும் கொண்ட மக்கள் இருப்பதன் காரணமாக நமது நாடு நிலைபெற்றிருக்கின்றது. நீங்கள் எனது சொந்த எண்ணங்களை வெளிப்படுத்திக் கூறுவதற்கான சந்தர்ப்பத்தை எனக்கு வழங்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். சென்ற முறை நான் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் *Thanks Giving* (நன்றி செலுத்தும் நிகழ்ச்சி) சந்தர்ப்பத்தில் இருந்தேன். அந்த சமயத்தில் உறவினர்களுக்கும் அன்பர்களுக்கும் மக்கள் நன்றி செலுத்தினர். இங்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தூதுச் செய்தி இதுவாகும். அதாவது அவர்கள் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சுற்றுப் பயணத்திற்காக அவர்களுக்கு மிகவும் நன்றி செலுத்துகின்றனர். மேலும் அவர்கள் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கனடா சுற்றுப் பயணத்திற்காக மிகவும் காத்து கொண்டிருந்தனர். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் கனடாவில் பல்வேறு வழிமுறைகள் மூலமாக மனிதயினத்திற்கு தொண்டாற்றி வருகின்றது. மதிப்பிற்குரிய மலிக் லால் கான் சாஹிபுடன் இணைந்து பல்வேறு திட்டங்களைத் தயார் செய்வதாக இருந்தாலும் சரி அல்லது மருத்துவமனைகளுக்காக பணம் ஒன்று திரட்டுவதாக இருந்தாலும் சரி அல்லது பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்கொடைகளை ஒன்று திரட்டுவதாக இருந்தாலும் சரி இத்தகைய எல்லா சந்தர்பங்களிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் மனித இனத்திற்கு சேவை செய்தவாறு அத்தகைய தருணங்களில் தங்களது 'எல்லாரிடத்திலும் அன்பு, எவரிடத்திலும் இல்லை வெறுப்பு' என்ற முழக்கத்தை எழுப்புகின்றனர். *Fort Me Murray*-வில் நடந்த விபத்தில் நீங்கள் இந்த துன்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்காக ஆயிரக்கணக்கான டாக்டர்களை அனுப்பி வைத்தீர்கள். இவ்வாறு நீங்கள் எப்போதும் மனிதயினத்திற்கு தொண்டு செய்து கொண்டே இருக்கின்றீர்கள். சில நேரங்களில் மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள உணவை ஒன்று திரட்டியவாறும் அல்லது சில நேரங்களில் பல்வேறு குடும்பங்கள் மற்றும் அகதிகளின் தங்குமிடங்களுக்கான ஏற்பாட்டை செய்தும் நீங்கள் தொண்டு செய்து வருகின்றீர்கள். உள்ளத்தில் ஆழத்திலிருந்து நீங்கள் செய்கின்ற முயற்சிகளுக்காக நாங்கள் நன்றி தெரிவித்து கொள்கின்றோம். நீங்கள் காட்டுகின்ற அன்பு, விருந்தோம்பல், மனிதயினத்திற்கு செய்கின்ற தொண்டு ஆகியவற்றை எனது அலுவலகத்தில் இருந்து காண்கின்ற நற்பேறு எனக்கு கிடைத்திருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தை சார்ந்த தாஹிரா ஷஃப்கத் என்ற பெயரிலுள்ள இளம்பெண் எனது அலுவலகத்தில் மிக நன்றாக பணி புரிந்து வருகின்றார். மக்களுக்கு தொண்டு செய்வதற்காக அயராது உழைத்து வருகின்றார். உங்களது இத்தகு முன்மாதிரியில் இருந்து தாக்கத்தை பெற்று பல மக்களும் இவ்வாறே தொண்டாற்றுவார்கள் என்று நான் நம்புகின்றேன். இன்று இங்கு நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்துள்ளோம். கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நலமுடன் இங்கிருந்து திரும்பிச் செல்வதற்காக துஆ செய்கின்றோம். நன்றி.

(தொடரும்....)


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.

**மர்ஹூம் A.N.A. ஹா:பிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237

**METAPLAST**
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

முஸ்லிம், கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனிதயினத்தை நான் நேசிக்கிறேன்....

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com

**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE



**276, N.H. Road, Coimbatore - 641 001.**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29

SUCCESS INDIA
PROMOTERS

Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 27 July 2017 Issue No. 30

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

இறைவனின் கடமைகளான தொழுகை, ஸக்காத்து முதலானவற்றை செயலாற்றுவதில் எவ்வித சோம்பலையும் மேற்கொள்ளாதீர்கள். உங்களின் கணவன்மார்களுக்கு மனதாலும், உயிராலும் கட்டுப்பட்டவராயிருங்கள். அவர்களது கவுரவத்திற்குரிய பெரும்பாலான பாகம் உங்களின் கரங்களிலேயே இருக்கின்றது. நீங்கள் இறைவனிடத்தில் நல்ல பெண்மணிகளாகவும், பணிவுள்ளவர்களாகவும் கருதப்படுவதற்காக நீங்கள் உங்களது பொறுப்புகளை நல்ல விதமாக நிறைவேற்றுங்கள். வீணாகச் செலவு செய்யாதீர்கள். கணவன்மார்களின் சொத்துக்களை வீணாக விரயம் செய்யாதீர்கள். மோசம் செய்யாதீர்கள்; திருடாதீர்கள்; குறை கூறிக் கொண்டிருக்காதீர்கள். ஒரு பெண் இன்னொரு பெண் மீது அல்லது ஆண் மீது வீண்பழி சுமத்தாதீர்கள்.

நமது ஜமாஅத்தில் இறையச்சம் அதிகரிக்கவும் பூமியின் மீது பொங்கி எழுந்து கொண்டிருக்கும் இறைவனது கோபம் அவர்கள் மீது உண்டாகாமலிருக்கவும், அதற்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக மாறவும், பிளேக் என்னும் கொடிய வியாதி இருந்து வரும் நாள்களில் அவர்கள் சிறப்பாக காப்பாற்றப்பட வேண்டும் என்ற நோக்கங்களுக்காகவுமே இந்த எல்லா அறிவுரைகளையும் நாம் இங்கு எழுதியுள்ளோம். உண்மையான இறையச்சமே இறைவனுக்கு திருப்தி அளிக்கக் கூடியதாக இருக்கிறது. (அந்தோ! உண்மையான இறையச்சம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது!!) மேலும் சாதாரண நிலையில் அல்லாமல் அடையாளம் என்ற நிலையில் முழுமையான இறை அடியானையே ஆபத்துகளிலிருந்து இறைவன் காப்பாற்றுகிறான். ஒவ்வொரு வஞ்சகனும் அல்லது அறிவீனமும் தன்னை இறை அடியான் என வாதம் புரிகிறான். ஆனால் எவர் இறை அடையாளத்தைக் கொண்டு இறை அடியாராக நிரூபிக்கப்படுவாரோ அவரே உண்மையான இறை அடியார் ஆவார். நான் இறைவனை நேசிக்கிறேன் என்று ஒவ்வொருவனும் கூறிக் கொள்ள முடியும். ஆனால் நேசிப்பதை வானத்தின் சாட்சியைக் கொண்டு நிரூபித்தால்தான் அவன் இறைவனை நேசிப்பவனாவான். தன்னுடைய மதமே உண்மையானது என ஒவ்வொருவரும் கூறிக் கொள்கிறார். ஆனால் எவருக்கு இவ்வுலகிலேயே (ஆன்மீக) ஒளி கிடைக்கின்றதோ அவர் சார்ந்துள்ள மதமே உண்மையானதாகும். ஒவ்வொருவரும் தனக்கு இரட்சிப்பு கிடைக்கும் எனக் கூறிக் கொள்கிறார். ஆனால் எவர் இதே உலகில் இரட்சிப்பின் ஒளியைக் காண்பாரோ அவரே அக்கூற்றில் உண்மையானவராக இருக்கிறார். ஆகவே நீங்கள் ஒவ்வொரு ஆபத்திலிருந்தும் இரட்சிப்பு பெறும் பொருட்டு இறைவனுக்குப் பிரியமுள்ளவர்களாக மாற முயலுங்கள். முழுமை தன்மையுள்ள இறை அடியாரே பிளேக்கிலிருந்து நிச்சயமாகக் காப்பாற்றப்படுவார். ஏனெனில் அவர் இறைவனின் பாதுகாப்பிலேயே இருந்து வருகிறார். ஆகவே நீங்கள் முழுமையான இறையச்சமுடையவர்களாக மாறுங்கள். இறைவன் பிளேக்கைக் குறித்து கூறியவற்றையெல்லாம் நீங்கள் கேட்டிருக்கின்றீர்கள். அது ஒரு கோபத்தின் நெருப்பாய் இருக்கிறது. ஆகவே நீங்கள் அந்நெருப்பிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

எந்த மனிதர் என்னை உண்மையாகப் பின்பற்றுகிறாரோ எவரிடம் எவ்வித மோசமும், சோம்பலும் கவனமின்மையும் காணப்படுவதில்லையோ, எவர் நன்மையுடன் தீமையை கலப்பதில்லையோ அவரே காப்பாற்றப் -படுவார். இதற்கு மாறாக எவன் இவ்வழியில் சோம்பேறித்தனமாக கால் எடுத்து வைப்பானோ மேலும் தக்வா என்னும் இறையச்சத்தின் வழிகளில் முழுமையாகச் செயல்படுவதில்லையோ அல்லது உலக இச்சைகளில் மூழ்கிக் கிடக்கின்றானோ அவன் தன்னைத்தானே சோதனையில் ஆழ்த்துகிறான். ஆகவே நீங்கள் எல்லா வகையிலும் இறைவனுக்குக் கீழ்ப்படியுங்கள்.

தன்னை பைஅத் என்னும் உடன்படிக்கையில் இணைத்து கொண்ட ஒருவர் தனது பொருளைக் கொண்டு இந்த ஜமாஅத்திற்கு ஊழியம் செய்ய இது உரிய நேரமாகும். எந்த மனிதர் ஒரு பைசா கொடுக்க சக்தியுள்ளவராய் இருப்பாரோ அவர் இந்த ஜமாஅத்தின் செலவுக்காக ஒவ்வொரு மாதமும் ஒரு பைசா வீதம் கொடுத்து வர வேண்டும். மேலும் எவரால் மாதாமாதம் ஒரு ரூபாய் கொடுக்க முடியுமோ அவர் மாதாமாதம் ஒரு ரூபாய் வீதம் கொடுத்து வர வேண்டும். அதன் மூலம் இறைவனும் அவர்களுக்கு உதவி செய்வான். குறைந்த உதவியாக இருந்தாலும் மாதாமாதம் தடையின்றி வந்து கொண்டிருக்க வேண்டும். இவ்வுதவி நீண்ட காலம் வரை மறந்து விட்டு ஏதாவதொரு நேரத்தில் தானாகவே செய்யும் உதவியை விட மேலானதாகும். ஒவ்வொரு மனிதனின் உண்மைத் தன்மையும் அவனது சேவையைக் கொண்டே அறியப்படும்.

அன்புக்குரியவர்களே! இது மார்க்க வளர்ச்சிக்காகவும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும் சேவை செய்வதற்கான தருணமாகும். இத்தருணத்தை ஒரு பாக்கியமாகக் கருதுங்கள். இது பின்னர் ஒருபோதும் உங்கள் கைக்கு வரப்போவதில்லை. ஸக்காத்து கொடுக்கக் கூடியவர் தனது ஸக்காத்தை இவ்விடத்திற்கே அனுப்ப வேண்டும். ஒவ்வொரு மனிதனும் வீணாக செலவு செய்வதிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அப்பணத்தை இவ்வழியில் ஈடுபடுத்த வேண்டும். இறைவனது அருட்கொடையையும் ரூஹுல் குத்ஸ் என்னும் பரிசுத்த ஆவியின் சன்மானத்தையும் பெற ஒவ்வொரு விதத்திலும் உள்ளத் தூய்மையுடன் செயல்படுங்கள். ஏனெனில் இந்த ஜமாஅத்தில் சேர்ந்தவர்களுக்காகவே இந்த சன்மானம் இருக்கிறது.

நமது நபி (ஸல்) அவர்களுக்கு தோற்றமளித்த பரிசுத்த ஆவியின் தோற்றமானது மற்றவர்களிடம் தோற்றமளித்ததை விட மேன்மையானதாகும். பரிசுத்த ஆவி சில நேரம் ஒரு நபி மீது புறாவின் உருவத்தில் வெளியானது. சில நேரம் இன்னொரு நபி அல்லது அவதாரத்தின் மீது பசுவின் உருவத்தில் வெளியானது. சிலர் மீது ஆமை, மீன் உருவத்தில் வெளியானது. பரிபூரண மனிதரான நமது நபி (ஸல்) அவர்கள் தோன்றாதவரை பரிசுத்த ஆவி மனித உருவில் தோன்றக் கூடிய நேரம் வரவில்லை. எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றியபோது அவர்கள் முழுமையான மனிதரான காரணத்தால் பரிசுத்த ஆவியும் அவர்கள் மீது மனிதனின் உருவிலேயே வெளியானது. இதனால் பரிசுத்த ஆவியின் சக்தியான 'தஜல்லி' என்னும் சிறப்பும் வலிமையும் கொண்ட பிரகாசமானது பூமியிலிருந்து வானத்தின் எல்லை வரை நிரம்பி விட்டது. இதனால் திருக்குர்ஆனின் போதனையானது இணை வைப்பதில் இருந்து பாதுகாக்கப்பட்டது.

ஆகவே நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இப்படிப்பட்ட ஒரு நபியைப் பின்பற்றியவர்களாக இருந்து கொண்டு ஏன் உங்களது உற்சாகத்தை இழக்கிறீர்கள்? நீங்கள் உண்மையிலும் தூய்மையிலும் நிலைத்து நிற்பதைக் கண்டு வானத்திலுள்ள மலக்குகளும் வியப்படைந்து உங்களுக்காக அவர்கள் துஆச் செய்வதற்கு தகுந்தாற்போல் நீங்கள் உங்களின் முன்மாதிரியை எடுத்துக் காட்டுங்கள். உங்களுக்கு வாழ்வு கிடைப்பதற்காக ஒரு மரணத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இறைவன் உங்கள் உள்ளத்தில் இறங்குவதற்காக, மன இச்சைகளை விட்டும் அதனை தூய்மைப்படுத்துங்கள். ஒரு பக்கத்தை முழுமையாக துண்டித்து விட்டு மற்றொரு பக்கத்தோடு முழுமையான முறையில் தொடர்பை ஏற்படுத்துங்கள். இறைவன் உங்களுக்கு உதவி புரிவானாக. *(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 80-85)*

**O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230**

**O.A.N. DOORS & STEELS**
DOORS & STEELS EXPERT



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic)
Tirunelveli - 627 005.

ரஹ்மானியா மேல்நிலைப் பள்ளி
ரஹ்மானியா தொடக்கப் பள்ளி
ரஹ்மானியா மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
**S.S. அஸன் அபூபக்கர் ✆ 94869 37769**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad